269/நா-தொ/ தன் - தயிலம்,
/76J4/
தன்வந்திரி தைலம் 500
பக்கம் 70

தயிலம்-௫௱.

இஃது

ஆறுமுகதேசிகரால்

பார்வையிடப்பட்ட,

பிரதிக்கினைக்க.

த. துரைசாமி முதலியார்

அவர்களால்

சென்னை

புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1925.

இதன் விலை] [அணா-8.

நெ. 23, பாளையப்பன் தெருவு, சென்னை.

உ

கடவுள் துணை.

பதினெண்சித்தர்களில்

மகாமகத்துவம்பொருந்திய

தன்வந்திரி பகவான்

திருவாய்மலர்ந்தருளிய

தயிலம்-நூா.

இஃது

ஆறுமுகதேசிகரால்

பார்வையிடப்பட்ட,

பிரதிக்கிணங்க.

T. சாரதா புத்தகசாலை அதிபர்

த. துரைசாமி முதலியார்

அவர்களால்

சென்னை

புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1925.

இதன் விலை] [அணா 8.

நெ. 23, பாளையப்பன் தெருவு, சென்னை.

S 942

புஸ்தக விளம்பரம்.

வயித்திய தினுசுகள்.

போகர் 7000-பாடல்	4	0
கொங்கணர்கடைக்காண்டம்500	0	8
போகர் 700-பாடல்	0	10
போகர் ஜெனனசாகரம்	0	12
போகர் சரக்குவைப்பு-800	0	14
உரோமரிஷி வயித்தியம்-500	0	10
அகஸ்தியர் வயித்தியகாவி-1500	1	0
பதினெண் வயித்திய அகராதி	1	0
நாடிசாஸ்திரம்	1	0

சோதிட தினுசுகள்.

மணிகண்டகேரளம்	0	8
வால்மீகர் ஆரூடம் மூலமும்உரை	0	3
சப்த்தரிஷி வாக்கியம் 1000-பாடல்	0	12
சாதக சிந்தாமணி	2	0
மங்களேஸ்வரியம்	2	0
ஜாதகபாரிஜாதகம்	0	10
சாதகஅலங்காரம் மூலம்	0	12
ஷை மூலம் உரையுடன்	2	0

டிராமா தினுசுகள்.

சதி-அனுசுயா	0	4
ஷை இரண்டாவது	0	4
லவகுச சரித்திரம்	0	4
ஷை இரண்டாவது	0	4
கோவிலன்-கர்னகி முதல் பாகம்	0	4
ஷை இரண்டாம்பாகம்	0	4
பாரீஸ் சகுந்தலா	0	4
பாரீஸ் லங்காதகனம்	0	4
கஜேந்திர மோக்ஷம்	0	4
அதிரூபஅமராவதிமுதல்பாகம்	0	4
ஷை இரண்டாம்பாகம்	0	4

ஞானசவுந்தரி	0	4
அல்லி அர்ச்சுன	0	4
ஷை இரண்டாம்பாகம்	0	4
நல்லதங்காள்	0	4
ஷை இரண்டாம்பாகம்	0	4
வள்ளி சரித்திரம்	0	4
பாரீஸ் மதிவல்லபமோகன	0	
ஷை திருப்புகழ் வர்ணமெட்டு	0	
சத்தியவான் சாவித்திரி	0	
சற்குண சாவித்திரி	0	
தசாவதார சரித்திரம்	0	

பல தினுசுகள்.

பழணியாண்டவர் காவடிசிந்து	0	4
பகவத்கீதை பாக்கிட் சயிஸ் 18-அத்தியாயங்கள் படங்களுடன்	0	8
ஷை கலிகோ பயிண்டு	0	10
ஷை பெரியது வசனம்	1	8
ஷை கிரந்த சுலோகம் தமிழ் அர்த்	1	0
கட்டளை கொத்து	1	0
ஷை கிளேசு	1	8
நாஞ்ஜீவவாத கட்டளை வசனம்	0	1
ஷை மூலமும் விசேஷ விருத்தியுரை 3-படங்களுடன்	0	8
தத்துவகட்டளை	0	1
ஜீவோற்பத்திசிந்தாமணி	0	4
வாகிமாலை	0	1
சடாக்ஷரமாரல்	0	1
ஆண்டாள் திருப்பாவை	0	2
மகாத்மாகாந்தி வந்தேமாதரம் கதர் துணிபாட்டு	0	1

சீமைதுணி கதர்துணி சண்டை	0	1
பர்மாடாப்பு என்னும்நொண்டிசிந்	0	1
சங்கீதபாலவித்தியாபோதினி	0	12
மங்கைமோகனள்	0	8
சிதம்பரசுவாமிகள் இயற்றிய உபதேச உண்மை	0	12
நிஷ்டானுபூதி மூலம் உரை	1	0
அகஸ்தியர் தேவாரத்திரட்டு திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு இதுகள் சேர்ந்தது சுத்தப்பதிப்பு	1	8
தேவிபக்திரசகீர்த்தனங்கள்	0	6
முருகன் பாமன் பக்திரச கீர்த்	0	5
சரவணபவன் பக்திரசகீர்த்தனம்	0	5
கோபாலகாலா	0	6
ஆதிபர்வம் பெரியயெழுத்து படங்களுடன்	2	8
ஷை கிளேசு கடிதம்	3	8

டி. சாரதா புத்தகசாலை,

நெ. 23, பாளையப்பன் தெருவு, மின்ட்போஸ்டு, மதாஸ்.

உ

கடவுள் துணை.

S242

தன்வந்திரி பகவான்

திருவாய்மலர்ந்தருளிய

தயிலம் ஐஞ்ஞூறு.

காப்பு.

கலிவிருத்தம்.

பாதியாளுமை பாதம்பணிந்துயான்
நீதியான நெகிழுந்தயிலத்தை
ஆதியானதோ ரண்டமுடிகூட்டி
சோதியாகவே துலங்கவுரைத்ததே. (க)

நூல்.

மகாசந்தனாதித்தயிலம்.

உரைக்குந்தயில முயர்ந்த சந்தனாதி
நிரைக்குஞ் சந்தநெருங்குந் தேவதாரம்
திரைக்குங் கோஷ்டந் திறமாங்கருஞ்சீரம்
வரைக்கு மதுரம் வளமாய்ச்சமன் தூக்கே. (உ)

தூக்கி வாலுவுழுவை யரிசியும்
தேக்குபத்திரி தேர்ந்த தாளிசமாம்
போக்கில்லாத பொருந்து மேலஞ்சுக்கு
தாக்குபத்திரி தக்ககார் போகியே. (ங)

போகுமாஞ்சில் புகழுஞ் சதாவேரி
ஆகுங் குப்பியறையு நன்னாரியாம்
ஏகும்பச்சை யெழிலான கிச்சிலி
பாகுஞ் சர்க்கரை பலமாய்கிறுத்திடே. (ச)

நிறுத்துச்சீரம் கெடிதா மகிலமாம்
  கறுத்தகாலின் கருங்காலிப் பட்டையாம்
திருத்தமான தெளிந்ததோர் திப்பிலி
  பொருத்தமான புகழ்சிந்தில் சேர்த்திடே. (ரு)

சேர்த்துமே கருவாப்பட்டை மிட்டாலும்
  பார்த்துநெல்லி பகருங் குடமல்லி
தீர்த்துகிராம்பு தெளியுமஞ் சிட்டியாம்
  தூர்த்துநாகங் திடியா மிருவேலி. (சா)

வேலியிந்து விரும்பு முத்தக்காசு
  நீலிசிட்டம் கெடிய பொன்னுங்கண்ணி
காலிகத்திரி கழறு மாத்தையாம்
  மூலிகெய்ச்சிட்டி முனையாகக் கூட்டிடே. (எ)

கூட்டிமஞ்சங் குலாவுமிரு மஞ்சங்
  நீட்டுநறப்பனை நிலையா நிலப்பனை
கூட்டுமுட்டி குறியாம் விலாமிச்சு
  நாட்டும்வெட்பாலை நவில்சமன் தூக்கிடே. (அ)

தூக்கிச சண்பகந் திடியாமொருபலம்
  போக்கில்லாமற் புகழு மிருவாட்சி
நோக்குந்தாழை நுவலு மிருதாழை
  வாக்குதப்பாமல் வகையா யெடுத்திடே. (கூ)

எடுத்துக்கூந்த லெழிலான மாணிக்கம்
  அடுத்துக்கொட்டை யறையுங் கரந்தையாம்
தொடுத்த பூலாவுந்தோன்று பாதிரியும்
  விடுத்த பச்சை விரும்புமகரமே. (ய)

விரும்புமூலம் விளங்கு கார்த்திகையாம்
  குரும்புரோணி குறிக்கும் நிலக்குமிழ்
திரும்புஞ் சாறடைதெளிந்த யெருக்கொடு
  அரும்புமூல மழகா யெடுத்திடே. (யக)

எடுத்துப்பாண்ட மெழிலா யிடித்துமே
  தொடுத்துமேசலம் தொண்ணூற் படியாகும்
கடுத்தகியாழங் கருதும் பதமதாய்
  விடுத்தமாகவே விளங்க விறக்கிடே. (யஉ)

இறக்கியே பசும்பாலிற் சமன்கூட்டு
　முறக்குமெண்ணை முதிரச் சமனுடன்
திறக்கமாகவே தேறவே காச்சிடு
　சிறக்கமாகத் தெளிய வடித்திடே.　　　　(மா)

வடிக்கும்போது வழங்கு கற்பூரமாம்
　நடிக்குங்கஸ்தூரி நவிலுங் குங்குமப்பூ
வெடிக்கும்ரோசனம் விரும்பிப் பொடித்திடு
　முடிக்குந் தயிலமுறையாகப் போற்றிடே.　　　　(மச)

போற்றுமாயன் புகலும் பதாம்புயம்
　ஏற்றுந்தீப மெழிலாய்க் கொடுத்துமே
ஆற்றுமண்டல மன்பாய் முழுகிடில்
　தூற்றுமே பலநோய்க ளகலுமே.　　　　(மரு)

அகலும் நாலாயிரத்துச் சில்வாணமும்
　பகலுஞ்சூரியன் முன்பனிபோ லகன்றிடும்
நிகலுமாந்தர்க்கு நேரா யுரைத்திட்டேன்
　வகலுந் தன்வந்திரி வாக்குபொய்யாதிதே.　　　　(மசு)

சிறுசந்தனாதித் தயிலம்.

பொய்யாதையா புகலுங் குருமொழி
　ஐயாசிறு சந்தனாதி யறைகிறேன்
கையானமூலி கருது சந்தனமும்
　மெய்யாம்பாலை விரும்பி யெடுத்திடே.　　　　(மஎ)

எடுத்துவேலி யெழிலா மதுரமாம்
　தொடுத்தசண்பகந் தோன்றும் விலாமிச்சு
அடுத்தசிர மறையும் வாலுழுவை
　கொடுத்துமே பாண்டங் குலாவியிடித்திடே.　　　　(மஅ)

இடித்துமே சலமெழிலாய்ப் பதக்கிடு
　நடித்தக்கியாழும் நவிலுந் தசத்திலொன்
றெடுத்துமே பசும்பாலிற் சமனெடு
　கொடுத்தநல்லெண்ணெய் குறிப்பாய் சமன்கூட்டே.　　　　(மகூ)

கூட்டியொன்றாய்க் குறுக்கவே காச்சிடு
　நீட்டமண்டல நேராய் முழுகிடில்

மூட்டும்வியாதி முடிவிட் டகன்றிடும்
பாட்டுதன்வ ந்திரிபகர் மொழிதப்பாதே. (உo)

மகாவில்வாதிதயிலம்.

தப்பாதையா தரணியில் மாந்தர்க்கு
ஒப்பாந்தயில முரைக்கும் வில்வா தியாம்
செப்பாமேபழந் தேர்ந்தவிரு தாரும்
அப்பா சிரமறையுந் தசமாமே. (உக)

ஆமேசந் தமறையுங் கருஞ்சீரம்
தாமேகோஷ்டந் தனிலவங்கப் பட்டை
போமேமாஞ்சில் புகலுங் கிராம்புடன்
காமேவேலி நவிலு முசுக்கையே. (உஉ)

முசுக்கைச்சிந்தில் மூனையாங் கருநெல்லி
வசுக்கையான வாலுமுழவை யரிசியும்
பசுக்கைமஞ்சள் பகருந் திரிமஞ்சள்
நசுக்கையாகவே நவில்சமன் தூக்கிடே. (உங)

தூக்கிப்பாண்டந் துவள விடித்துமே
தாக்குமேசலந் தண்ணீறு நாழி
போக்குமே பதினறி லொருபங்கு
வாக்குதப்பாமல் வாகாகக் காச்சிடே. (உச)

காச்சியே பசும்பாலிற் சமனிடை
ஆசசுமெள்ளெண்ணே யறையுஞ் சமனெடை
நீசசுபோகவே நேர்ந்த மெழுகதாய்
மூச்சிடாமல் முதிர விறக்கிடே. (உரு)

இறக்குமரோசன மெழிலான குங்குமம்
திறக்கமானதோர் தேர்ந்த கஸ்தூரியும்
உறக்கமாகவே யோங்கப் பொடித்திட்டு
பறக்கமாகவே பரமனைப் போற்றிடே. (உசு)

போற்றிமண்டலம் புகழாய் முழுகிடில்
ஆற்றும்பித்த மறையு நாற்பதுவும்
காற்றுங் காந்தலுங் கண்ணீருகலும்
தூற்றும்பீனிசந் தூடியாக நீங்குமே. (உஎ)

நீங்கும்வெட்டை நெருங்கு மழலையும்
  பரங்குகண்ணேய் பகருந்தொண் ணூற்றும்
நீங்குமேசெய்யுந் தேர்ந்ததோர் சன்னியும்
  வாங்கிப்போமென வகுத்தார் முனிவரே. (உஅ)

வெட்டிவேர்த்தயிலம்.

வகுத்தவேலி வலுவா மிருவேலி
  தொகுத்தசுக்குடன் தோன்றுங் கருஞ்சீரம்
பகுத்தகோஷ்டமும் பகரும் விலாமிச்சு
  மிகுத்தசந்தனமே னிச்சம னெடே. (உகூ)

எடுத்துக்கியாழ மேழலாகக் காச்சியே
  கொடுத்துமே பசும்பாலிற் சமன்சேரு
கொடுத்து மெள்ளெண்ணெய்குலாவு மவ்விடையாம்
  அடுத்துமே பாண்டமன்பாகக் காச்சிடே. (௩0)

காச்சிரே ரசனங்கரு துங்குமப்பூ
  வீச்சும்பூரம் விரும்பும் பச்சைப்பூரம்
நீச்சிடாமல் சிறுகப் பொடித்துமே
  பாச்சுமெண்ணெயிற் பாங்காகச் சேர்த்திடே. (௩க)

சேர்த்துமூழ்கச் சிறக்கும் பீனிசம்போம்
  கோர்த்துநீர்வரும் குழிக்கண் புழுவறும்
கார்த்துமேகமுங் கண்சிவப்பா னறும்
  ஏர்த்தபித்தமு மேங்கித் தவிக்குமே. (௩உ)

தவிக்குமே கபந்தானேடிப் போகுங்காண்
  அவிக்குங்கண்ணின்பூ வானிப்பூ தானறும்
கவிக்குங் கண்திரை காணுதொடுங்கிடும்
  புவிக்குண்மாதர்க்குப் புகழா யறைந்ததே. (௩௩)

அறைந்தமாமுனி யாயுறு வேதந்தான்
  நிறைந்தே னிம்முறை தெளிவுறமாந்தர்க்கு
கறைந்தேனிந்நூல்போற் கருதாரென் னூலிலும்
  சிறந்ததன்வந்திரி தெளிவை மிகப்பாரே. (௩௪)

கருமுள்ளித்தயிலம்.

பார்த்துமே கருமுள்ளி பலம்நூறு
சேர்த்துமதாஞ் சிறந்தகோஷ்ட முடன்
ஆர்த்து தும்மட்டிக்கா யிருநூறுடன்
கோர்த்துமே சலம்படி நூறெடுத்திடே. (கரு)

எடுத்துப்பாண்டத்திட் டெழிலாய்க் கியாழஞ்
செய்தடுத்திடாமல் தனிப்பசும் பால்சமன்
அடுத்துமெள்ளெண்ணெ யதற்குச் சரிசமன்
தொடுத்து மொன்றாய்த் தீயதைமூட்டிடே. (கசு)

மூட்டிப்பாக முதிராய் வடித்தெடு
நீட்டிமண்டல நோய் முழுகிடு
சூட்டும்வாதஞ் சுவாசகாச மீளை
கோட்டுமந்தார காசம்விட் டோடுமே. (கஎ)

ஓடுங்கிரந்தி யுறையு மரையாப்பு
நீடும்வெள்ளை நெருங்கு மாண்டவாதம்
சாடும்பாண்டு சரீரவீக்க முதல்
ஈாடுபோமெனக் கழறினர் முனிவரே. (கஅ)

மகாசாட்டாணைத் தயிலம்.

முனிவர்வாக்குமுறை பொய்யா தொருநாளும்
தனியாஞ் சாட்டாணைப் பலமுன்னூறு
வனியர் மறுகுவாசாய்ச் சமனிடை
தோனியாய்ப் பாண்டந் துவளவிடித்திடே. (கக)

இடித்துமே சலமிரு மரக்காலரை
நடித்தகியாழமும் நாலிலோர் பங்கெடை
தொடுத்துமே பசும்பாலிற் சமனெடை
அடுத்துமெள்ளெண்ணெ யவ்விடை தூக்கிடே. (சம)

தூக்கிததயிலந் துவளவே காச்சிடு
தாக்குமண்டலந் தனிவார மிருமுறை
பேர்க்கில்லாமற் பொருந்த முழுகிடு
வாக்குதப்பாது வகுத்த முறையிதே. (சக)

தப்பாது தப்பாது தன்வந்திரிமுறை
அப்பா ரோகமறையும் வாதரோகம்

செப்பா மேகந்தெளிந்திடு மேனியாம்
ஒப்பாமாந்தர்க் குரைத்தது வுண்மையே. (௪௨)

கடுக்காய்த்தயிலம்.

உண்மையாக வுரைக்கிறேன் மாந்தர்க்கு
கண்மையான கடுக்காய் நூறுபலம்
தண்மையானதோர் கூகைநீ றெண்பலம்
வெண்மையாஞ் சலம்விரும்புந் தூணிசேரே. (௪௩)

சேர்த்துப்பாண்டக் கிறமாகக் காச்சிடு
கோர்த்துமே பசும்பாலிற் சமனெடை
ஆர்த்துஞ் செவ்விளநீரது மவ்விடை
தூர்த்துமெண்ணை தூடியாகச் சேர்த்திடே. (௪௪)

சேர்த்துமெழுகு பதத்தில் வடித்திடு
பார்த்துமாயன் பதாம்புயம் போற்றியே
தீர்த்து மண்டலந்தீர முழுகிடு
ஆர்த்துக் கண்ணோ யலறியேவோடுமே. (௪௫)

ஓடும்பீனிச முறையு மண்டைச்சூலை
நீடும்வாய்வு நெருங்குங் கபரோகம்
கூடுமேகங் குமிக்குங் கழல்வாதம்
சாடுங்காச்சல் தழலோடிப் போகுமே. (௪௬)

சுக்குத் தயிலம்.

போகுமாந்தர்க்குப் புகலத் தயிலமொன்
முருகுஞ்சுக்குத் தனியா விருசேரு
பாகுமே சலம்படி சலமெட்டதாம்
ஆகும்பாண்டத்தி லன்பாகக் காச்சிடே. (௪௭)

காச்சுமே வாலுழுவை யரைத்திடு
பாச்சிடு மெண்ணெய்பகரு நற்பாலிலே
தீச்சிடாமல் சிறக்கப் பதம்வடி
ஆச்சியம் பாளடியிணை போற்றிடே. (௪௮)

போற்றிமண்டலம் பொருந்த முழுகிடில்
காற்றுபோல் வீசுங் கண்ணெரிச்சல்முதல்
ஆற்றுங்கோப மழலைதணியுங் காண்
தூற்று மேகந்துடர்ந்த வனம்போமே. (௪௯

போமேதோஷம் புகலுங்கிரி தோஷம்
தாமே யிளைதகுந்த சயமேகும்
நாமேசொன்னேம் நவில முனிவோரும்
ஆமேமாந்தர்க் கறைமொழி யுண்மையே. (ரு0)

நெல்லிக்காய்த்தயிலம்.

உண்மையாக வுரைக்கிறேன் மாந்தர்க்கு
தண்மை நெல்விதனிக் காயிருசேரு
வண்மையான வல்லாரை யொருசேரு
கண்மையான கழறுஞ் சலமாறே. (ருக)

ஆருபாண்ட மறைய விடித்திடு
தூறுகியாழங் துடியாம் நாலிலரை
நீறுமே பசும்பாலிற் சமனெடை
கூறுமெள் ளெண்ணெய் குறிக்குஞ்சமன்கூட்டே. (ருஉ)

கூட்டும்பாகங் குதிக்கு மிளப்பாகும்
நீட்டுக்தயிலம் நோ முழுகிடில்
சூட்டுபித்தஞ் சுய லுமத மூர்ச்சை
மாட்டும்ரோக மகன்றேடிப் போகுமே. (ருங)

போகுமூர்ச்சை புகலுமத மூர்ச்சை
ஆகும்பித்த மறையுங் கரும்பித்தம்
ஏகுங்கிறுப்பு யெழிலான சன்னியும்
போகுமென்று புகன்றனர் சித்தரே. (ருச)

அறுகன்வேர்த்தயிலம்.

சித்தர்வாக்குத் திசையிலும் பொய்யாது
பத்தர்ஞானியர் பகரா ரொருக்காலும்
உத்தமாந்தர்க் குறுதியா யாகுதற்
கத்ததன்வந்திரி கழறின துண்மையே. (ருரு)

உண்மைகேளு முரைக்கிறேன் மாந்தர்க்கு
தன்மையான தனியறுகன் வேரு
வண்மையான வரட்பூலா வேர்சமன்
திண்மையாய்ப் பாண்டந்திறமா யிடித்திடே. (ருசு)

இடித்துப்பாண்ட மெழிலாய்ப் பொதிந்துமே
லடித்துமே சலம்வாகா யிருநாழி

தடுத்திடாமல் தனிப்பதமாய்க் காச்சி
அடுத்துமாவின்பா லன்பாய்ச் சரிசேரே. (ருஎ)

சேர்த்து மெழுகுபதமாய் வடித்திடு
தூர்த்து மீசனர் துய்யபதபபோற்றி
ஆர்த்துந்தயில மறையுமோர் மண்டலம்
பார்த்துப் பதமாய்ப் பாங்காய்முழுகிடே. (ருஅ)

முழுகும்போது முறைகாச்ச லோடிடும்
அழுகுங் கண்ணீரறையு நீர்ப்பாச்சலும்
புழுகுவெட்டுப் புகலு நரைமறை
நழுகும்ரோகம் நவின்றேடிப் போகுமே. (ருகூ)

போகுமண்டைப் புகைச்சல் கனப்போடு
ஏகும்பித்த மெழிலாக நாற்பதும்
வாகுரோகம் வகுக்குங் கணக்காச்சல்
சாகுமாந்தை சடலம்விட் டோடுமே. (சூ0)

மிளகுதயிலம்.

ஓடுமோந்தர்க் குறுதியா யுறைக்கிறேன்
நீடுமிளகு நேர்ந்த நன்மிளகாம்
ஆடுமேபல மறுபது தானெடு
கூடுந்தக்காளி குறுகச் சமனெடே. (சூக)

எடுத்துப்பாண்ட மெழிலாக காய்ந்தபின்
தொடுத்தக்கிழாங் தோன்றச் சமனதாய்
அடுத்துமே பசும்பாலுஞ் சமன்சேரு
விடுத்தயெள் ளெண்ணெய்மேவச் சமன்கூட்டே. (சூஉ)

கூட்டியொன்றாய்க் குறுகவே காய்ச்சிடு
நீட்டிமண்டல நேராய் முழுகிடு
கூட்டும்ரோகங் குறிக்கும் கயரோகம்
பூட்டுமேகம் புகலப் பறக்குமே. (சூங)

கருஞ்சீரகத்தயிலம்.

பறக்குமாந்தர்ப் பகருங் கருஞ்சீரகம்
சிறக்கமாகவே சேர்ந்த பலம்நூறு

திறக்கமாகவே தேர்ந்த கியாழுஞ்செய்
முறக்கமாகவே மிசியப்பாண்ட மிடே. (கூச)

உட்டேதிப மெழிலாக மூட்டியே
கட்டேகியாழுங் கருகவே காய்ந்தபின்
சட்டமானதோர் சார்ந்த பசும்பாலும்
வட்டமாகவே வாகாய்ச் சமன்கூட்டே. (கூரு)

கூட்டிப்பாண்டம் குலாவியே காய்ச்சிட்டு
நீட்டிமண்டலம் நோய் முழுகிடில்
பூட்டுமேகம் புகலுங் கருமேகம்
வாட்டுஞ்சீதம் வரைந்தோடி நீங்குமே. (கூசு)

நீங்கு மீளைநேருங் குங்கபமீளை
ஓங்குமேசொரி வுயர்ந்த பெருஞ்சொரி
தீங்குபித்தம் தெறித்திடு நாற்பதும்
பாங்குமேனி பதிவிட்டே யோடுமே. (கூஎ)

கார்போகவரிசித்தயிலம்.

ஓடுமோந்தர்க் குறுதி யுரைக்கிறேன்
ஆடுங்கார்போக வரிசி நூறுபலம்
தேடுநெல்லித் தெளிந்த மாசிக்காயும்
பாடுகாலதில் பாங்கா யெடுத்திடே. (கூஅ)

எடுத்துபாண்ட மெழிலா யிடித்துமே
தொடுத்துக்கிழாயம் தோன்றவே காச்சிடு
அடுத்துமே பசும்பாலிற் சமன்சேரு
நடித்தயெள்ளெண்ணெய் நலமாய்ச்சமன் தூக்கே. (கூகூ)

தூக்கித்தயிலத் துவளவே காய்ச்சிடு
தாக்கிதேவியின் தாமரைத் தாள்போற்றி
போக்கில்லாமல் புகழாய் முழுகிடு
வாக்குதப்பாது வரைந்தார் முனிவரே. (எய)

அறைந்தமாமுனி ஆயுறு வேதமாம்
நிறைந்தசூலை நெருங்குங் கபசூலை
பறைந்தவாயு பகரும் பித்தமுடன்
துறைந்த சேத்துமங் தொண்ணூறகலுமே. (எக)

அகலும்ரோகம் அறையுமத மூர்ச்சை
 நிகலும்வாந்தி நெருங்குங் காசமுடன்
புகலும்மாலை புகைக்கண் திரையுறும்
 சகலமானநோய்த் தாண்டிப் பறக்குமே. (எஉ)

விஷமுஷ்டித்தயிலம்.

பறக்குமுஷ்டி பகரும் விஷமுஷ்டி
 திறக்கமாகவே சிறக்க நூறுபலம்
முறக்கமானதோர் முசுக்கை சரிபலம்
 சிறக்கமான நெய்ச்சிட்டி சமன்சேரே. (எக)

சேர்த்துக்கியாழும் சிறக்கப் பதமதாய்
 கூர்த்துப்பாண்டங் குலாவி யிறக்கிடு
ஆர்த்துமே யிளநீரும் நிம்பச்சாறு
 பார்த்துப்பதமாய்ப் பாங்காகக் கூட்டிடே. (எச)

கூட்டியெள்ளெண்ணெய் குலாவும் சரியெடை
 நீட்டித்தியும் நெருக்கமாய் மூட்டியே
பூட்டுமேபதம் புகலவே காய்ச்சிடு
 மீட்டுமெண்டல மதுவல முழுகிடே. (எரு)

முழுகும்போது முறைகாய்ச்ச லோடும்
 வழுகுமாந்தை வருக்குங் கணக்காய்ச்சல்
பழுகுமேனி படிகம்போலே மின்னும்
 அழுகுமரோகம் அவனிவிட் டோடுமே. (எசு)

ஓடுங்கிரந்தியு முற்ற பெருஞ்சூலை
 ஆடும்வெள்ளை அறையு மரையாப்பு
சாடுரோக மதனிக் கழல்வாதம்போ
 நீடும்வியாதி நெருங்கப் பறக்குமே. (எஎ)

பறக்குமென்றல்லோ பாடினர் சித்தரும்
 சிறக்கமானதோர் தேர்ந்ததின் னூலாகும்
திறக்கமாந்தர்க்குத் தெளிய வுரைத்தது
 பறக்கவியாதி பகர்ந்தனர் சித்தரே. (எஅ)

பொன்னுங்கண்ணித்தயிலம்.

சித்தர்வாக்குத் திசையிலும் பொய்யாது
 சுத்தமான சுகந்தபொன் னுங்கண்ணி

எடுத்துப்பாண்ட மெழிலாய்க் கலந்துமே
 தொடுத்துமே பதந்தோன்றவே காச்சிடு
அடுத்துச் சந்தனமதிற் பலமூன்றிடு
 கொடுத்துதீபங் குலாவி யிறக்கிடே. (கூச)

இறக்கியீச னெழிற்பதம் போற்றியே
 சிறக்கமண்டலஞ் சீராய் முழுகிடில்
பறக்குஞ்சன்னிப் பகரப் பதின்மூன்றும்
 துறக்கமாகவே துலங்கோடிப் போமே. (கூரு)

போகும்பித்தம் பொருந்துஞ் சிலேத்துமம்
 ஏகும்வாக மெழிலான ரோகமும்
நோகுமேனி நொறுங்கு மதிசாரம்
 வாகுதன்வந்திரி வகுத்தது வுண்மையே. (கூசா)

ஆவாரைபஞ்சாங்கத் தயிலம்.

உண்மையாக வுரைக்கிறேன் மாந்தர்க்கு
 தண்மையான தனிப்பஞ்ச மாவாரை
வெண்மையான விரும்பும் பசும்பாலிற்
 திண்மையாகத் தெளிவுறக் காச்சிடே. (கூஎ)

காச்சியெண்ணெய் கருதச் சரிசமன்
 தீச்சிடாமல் தெளியப் பதிம்வடி
மூச்சிடாமல் முழுகவோர் மண்டலம்
 போச்சுமே பிணிபுகல வகலுமே. (கூஅ)

அகலுமேக மறையு மந்தாரம்போம்
 புகலுமீளை பொரும விரைப்புடன்
நிகலும்வெட்டை நெடிய கபரோகம்
 சகலநோய்களுந் தாண்டிப் பறக்குமே. (கூகூ)

துவரங்குச்சித்தயிலம்.

பறக்குமூலம் பகருந் துவரையாம்
 சிறக்கசுக்குடன் சேர்ந்த பறங்கியாம்
அறக்குச் சந்தனமகிற் கட்டைநன்னாரி
 திறக்கமாகவே சேரச்சமன் கூட்டே. (எ)

கூட்டிப்பாண்டக் குமுற விடித்துமே
 கூட்டுமே சலங்குறிக்க விருநாழி

கூட்டுமே பதங்குலாவி யிறக்கிடு
  கூட்டுமெண்ணெய் குணமாய் முழுகிடே. (௱௧)

முழுகும்போது முறைக்காச்சல் தானறும்
  முழுகும்போது சியாழுப் பித்தமறும்
முழுகும்போது முறைசன்னி தானறும்
  முழுகும்போது முழுமே னிறுகுமே. (௱௨)

வேலம்பட்டைத்தயிலம்.

இறுகுமேனி பிணங்கும் பிணியற
  குறுகும் வேலமாம்பட்டை யறுபலம்
அறுகன்வேரு மறையச் சமனெடை
  சிறுகவேசலஞ் சிறக்கப் படிகூட்டே. (௱௩)

கூட்டிப்பாண்டங் குலாவி யுழக்கதாய்
  நீட்டுமெள்ளெண்ணெய் நோய்ச் சமனெடை
மூட்டிக்காய்ந்து முதிர விறக்கிடு
  சூட்டிமண்டலஞ் சிறக்க முழுகிடே. (௱௪)

சிறக்குமேபிணி சேரா தொடுங்கிடும்
  பறக்குஞ்சன்னி பகரப்பதின் மூன்றும்
உறக்கமான வுயர்ந்த மேகப்படை
  திறக்கமாகத் தெளிய வறைந்ததே. (௱௫)

நொச்சிலித்தயிலம்.

அறைந்தமாமுனி யாயுறு வேதமாம்
  நிறைந்தமூலி நெருங்கு மிக்காவியம்
பறைந்தநொச்சிலி பகருஞ் சமூலமாம்
  முறைந்த பாண்டமு சிறப்பொதிந்திடே. (௱௬)

பொதிந்துமே சலம்புகல விருநாழி
  வதிந்தகியாழம் வாகா யிறக்கிடு
சதிந்த நிம்பத்தின் சாறுபடியரை
  முதிர்ந்தவிளநீர் முறையாய்ச் சரிக்கூட்டே. (௱௭)

கூட்டுமெண்ணெய் குலாவுஞ் சரியெடை
  மூட்டுபாண்ட முதிரவே காச்சிடு
நீட்டுமண்டல நோய் முழுகிடு
  கூட்டுசென்னி குளிப்பாய்ப் பறக்குமே. (௱௮)

குறிக்குஞ்சன்னி குணமாமுக சன்னி
தெறிக்குநேத்திரந் தேர்ந்த புழுவெட்டு
முறிக்கும்நரம்பு முனையாம் பிடரியில்
தறிக்குமேபிணி தரியா தொடுங்குமே. (௯௯)

மலைவேம்புத்தயிலம்.

ஒடுங்குமாந்தர்க் குறுதி பிணியற
நடுங்குமேசுரம் நவிலவே யோடிட
மடுங்குவேம்பு மலைவேம்பு சமூலமாம்
தடுங்கிடா சலந்தா விருதூணியே. (௱)

துணிநீரில் துணிவாய்க் கியாழஞ்செய்
காணிராடா தோடைக் கறுதுஞ்சமன்
பூணிரெண்ணை பகன்றிட வவ்விடை
தோணெக்காச்சித் துடுப்பா யிறக்கிடே. (௱௧)

துடுக்குமண்டலந் தோன்ற வொருமுறை
நடிக்கத்தானஞ்செய் நவிலும் பிணியறும்
முடிக்குமெண்ணெய் முறைதப்பா தொருநாளும்
படிக்கச்சனனி பதின்மூன்றும் போகுமே. (௱௨)

சன்னி பதின்மூன்றுக்கும் மேற்பூசுந்தயிலம்.

போகசன்னி புகழாக மாந்தர்க்கு
ஆகவெள் ளெருக்கன் சமூலமெடு
பாகச்சாம்பிராணி பதமாய் பொடுத்திடு
வேகக்கியாழம் விரும்பியே காச்சிடே. (௱௩)

காச்சும் வேப்பெண்ணை கருதுஞ்சரிசமன்
தீச்சிடாமல் சிறக்கப் பதமாய்
தேச்சுமேனி சிறக்கவே பூசிடில்
போச்சுசன்னி புகல்பதின் மூன்றுமே. (௱௪)

வாதுமைக்கொட்டைத் தயிலம்.

புகலுந்தயிலம் புகழாக மாந்தர்க்கு
நிகலும்வாதுமைக் கொட்டை யறுபலம்
அகலுமாமணக் கெண்ணெய்ச் சரிசமன்
புகலும்ரண்டையும் பொருந்த வரைத்திடே. (௱௫)

அறைத்துமே குழித்தயில மிறக்கிடு
   நிறைத்தயிலம் நோராய் முழுகிடில்
மறைத்தகண்புகை மாதர் பிணியறும்
   முறைதப்பாமல் முழுகியே கண்டிடே. (கயசு)

கண்டமாலை கதறி யொடுங்கிடும்
   கண்டமேற்படக் கழறும் வியாதிபோம்
கண்டகாந்தல் கதறி யலறிடும்
   கண்ட சகலநோய் கடுக்கப்பறக்குமே. (கயஎ)

பறக்குமென்று பகர்ந்தே னுயுற்வேதம்
   பறக்குமென்று பகர்ந்தேனே யிம்முறை
பறக்குமென்று பகர்ந்தேனே சித்தர்க்கு
   பறகுமென்று பகர்ந்தேனே மாந்தர்க்கே. (கயஅ)

சித்தாமுட்டித் தயிலம்.

மாந்தர்க்காக மறைந்தபொரு ளெல்லாம்
   சாந்தமாகத் தனியா யுரைக்கிறேன்
தேர்ந்தமுட்டி சிறந்த சித்தாமுட்டி
   போர்ந்தவே பலம்புகல் நூறு தூக்கிடே. (கயகூ)

தூக்கிப்பாண்டத்திற் றய்ய நறுக்கிடு
   தாக்குமேசலந் தண்ணீ ரறுநாழி
போக்கிலலாமற் பொருந்தக் கியாழஞ்செய்
   வாக்குதப்பாமல் வறையும் பழச்சாறே. (கஉய)

சாற்றிலெண்ணெய் தனியாஞ சரியெடை
   ஊற்றிப்பாண்ட முறையவே காச்சிடு
போற்றியம்பாள் புகழ்பாதம் போற்றியே
   தூற்றிதூபந் துவளக் கொடுத்திடே. (கஉக)

கொடுத்துமண்டலங் குறிப்பாய் முழுகிடில்
   இடித்துமே பித்தமகலுஞ் சிரோபாரம்
கடுத்தகாந்தலுங் கண்ணீ ரருகிலும்
   தொடுத்தரோகமுந் தொடர்ந் தோடிப்போகுமே. (கஉஉ)

லவங்கப்பட்டைத்தயிலம்.

போகுமாந்தம் பொறும வீளையறும்
   ஆகும்பட்டை யருஞ்சன்ன லவங்கமாம்

பாகுசிரம் பகரும் கற்சிரகம்
ஏகுமஞ்ச ளெழிலாம் பன்னீர்ப்பூவே. (கஉக)

பூவுங்கூட்டிப் புகல விடித்துமே
மேவுப்பாண்டத்தில் விரும்பி காச்சிடு
ஆவுமென்ற பசும்பால் சரியெடை
பாவுமெண்ணெய் பதமாகக் கூட்டிடே. (கஉச)

கூட்டுமெண்ணெய் குலாவியே காச்சிடு
சூட்டுமண்டலஞ் சுகமாய் முழுகிடு
வாட்டுபித்தம் வகையா யிருமல்போம்
பாட்டு தன்வந்திரி பாடினதுண்மையே. (கஉரு)

நன்னாரித்தயிலம்.

உண்மையாக வுரைக்கிறேன் மாந்தர்க்கு
வண்மையாக வருக்கு நன்னாரியை
தண்மையாகத் தனிப்பலம் நூறெடு
திண்மையாகத் திறமா யெடுத்திடே. (கஉசா)

எடுத்துப்பாண்ட மெழிலாய்ப் பொதிந்திடு
தொடுத்தமதுரந் தோன்று லவங்கமாம்
வடித்தபூஞ்சாந்து வருக்குங் கிளியூறல்
நடித்த பச்சிலை கிச்சிலி தூக்கிடே. (கஉஎ)

தூக்கியகஸ்தூரி துய்ய தாளிசமும்
தாக்குமிருவேலி தனியக் கிராகாரம்
போக்கில்லாமற் பொருந்து முத்தக்காசு
வாக்குசந்தனம் வளமாகத் தூக்கிடே. (கஉஅ)

தூக்கியே சரக்கொன்று வரைப்பலம்
தக்கியே பசும்பாலி லரைத்திடு
போக்கில்லாமற் பொருந்துங் கியாழத்தில்
தேக்குமெண்ணெய் திறமாய்ச் சரிகூட்டே. (கஉகூ)

கூட்டுமூலி குறிக்கும் வல்லாரியாம்
வாட்டுங்கையான் வகையாப் பொன்னாங்கண்ணி
ஊட்டுமூலி யுழக்குச் சமன்சேரு
பாட்டுமேபதம் பாங்காய் வடித்திடே. (கஙώ)

வடித்துயெண்ணெய் வளமாய் முழுகிடில்
நடித்தசோகை நவிலுங் காமாலைபோய்
வெடித்தமேனி விரும்பும் பொன்னிறமாம்
துடித்தபித்தமுந் தோன்று மேகம்போமே. (ககக)

போமேமேகம் பொருந்தும் பிரமியம்
ஆமேகிரந்தி யறையும் நீரிழிவு
சாமேமருந்திடு தணிய முறிந்திடும்
நாமேசொன்னேம் நலமான மாந்தர்க்கே. (ககஉ)

மாம்பட்டைத் தயிலம்.

மாந்தர்க்காகவே மாம்பட்டை தயிலமொன்
றேந்தப்பட்டை யிருநூற் பலமெடு
சார்ந்தநிலப்பனை சாற்றும் பலமைந்து
போர்ந்தமிட்டான் புகலச் சரிகூட்டே. (ககங)

கூட்டிப்பாண்டங் குலாவி யிடித்துமே
நீட்டுங்கியாழ நிரையாகக் காச்சிடு
பாட்டுமெண்ணெய் பகருஞ் சரியெடை
மூட்டிக்காச்சி முதிர வடித்திடே. (ககச)

வடித்தயெண்ணெய் வளமாக மூழ்கிடு
நடித்தமேகம் நவிலும் பிரமியம்
கடித்தசில்விடங் காணு தொடுங்கிடும்
முடித்ததயில முறையும் பொய்யாதிதே. (ககரு)

கையாந்தகரைத் தயிலம்.

பொய்யாதையா புகலுங் குருமொழி
அய்யா தன்வந்திரி யறிய வுரைக்கிறேன்
கையாந்தகரை கருதுந் தயிலமாம்
மெய்யாமாந்தர்க்கு விரும்பி யளித்ததே. (ககசு)

விரும்புமூலி விளங்குந் தசபலம்
கரும்புக்தகரை காட்டுஞ் சரிபலம்
பொருந்துமிளகு பூண வொருபலம்
திருந்துமே பசும்பாலிற் சமன்சேரே. (ககஎ)

சேர்த்துக்கியாழந் திறமாய் வடித்திடு
பார்த்துமெண்ணெய் பகருமவ் விடையாம்
தீர்த்துமேபதந் தெளிவாகக் காய்ச்சிடு
ஆர்த்து மாயனடி யிணைபோற்றிடே. (கரு௮)

பேர்ற்றிமண்டலம் புகழாய் முழுகிடு
தூற்றுமேகந் தொடர்ந்த பித்தமாறும்
ஆற்றுங் கோபமழலே தணலரும்
சாற்றுமந் தயிலஞ் சரிமுறைதப்பாதே. (கருகூ)

மருதம்பட்டைத்தயிலம்.

தப்பாதையா தரணியில் மாந்தர்க்கு
ஒப்பாமருதம் பட்டைத் தயிலங்கேள்
செப்பாமூலி சிறந்த பொடுதலே
அப்பா மூன்றுமறையப் பாண்டமிடே. (கசய)

பாண்டந்தன்னிற் பதக்கு சலமிடு
பூண்டகியாழம் பொருந்தவே செய்திடு
ஆண்டுமெண்ணே யறியச் சமனதாய்
தீண்டுமேபதந் தெளியவே காச்சிடே. (கசக)

காசசும்வாலே கருதும் மனோன்மணி
ஆச்சிபாத மடிவணங்கித் தொழு
மூச்சிடாமல் முறையுடன் மூன்முழு
போச்சுமேகம் புகன்றேடிப் போகுமே. (கசஉ)

போகும்பாண்டு புகலுங் காமாலேபோம்
ஏகும்ரோம மெழும்பும் பெருஞ்சிரங்
காகுமேசொரி கருமேகந் தானறும்
பாகுதன்வந்திரி பாடின துண்மையே. (கசங)

கொழிஞ்சிப்பட்டைதயிலம்.

உண்மையாக வுரைக்கும் பரஞ்சோதி
வெண்மையானதோர் வெண் கொழுஞ்சிரசம்
தன்மையான தனிநெல்லிக் காய்ரசம்
திண்மையான தெளிந்த கியாழமே. (கசச)

மேவுமெண்ணெய் விளங்குஞ் சரிசமன்
தாவுமேபதந் தவறுமற் காச்சிடு

பாவுமண்டலம் பண்பாய் முழுகிடில்
ஏவும்பித்த மிறங்கியே யோடுமே. (கசரு)

ஓடுஞ்சூலே யொடுங்கு மேகச்சூலே
நீடுங்கிரந்தி நெருங்குஞ் சிறங்குபோம்
கூடும்ரோகமுங் கூன்டோ டொடுங்கிடும்
பாடுதன்வந்திரி பாட்டு பொய்யாதிதே. (கசசு)

அழிஞ்சில்தயிலம்.

பொய்யாதையா குருவின் பகர்மொழி
அய்யா அழிஞ்சில் தயில முறைக்கிறேன்
மெய்யாசமூலம் விரும்பும் நூறுபலம்
செய்யாநொச்சிச் சிறக்க சமன்கூட்டே. (கசஎ)

கூட்டுப்பர்ண்டக் குமுறப் பொதிந்துமே
நீட்டுக்கியாழம் நேராய்க் காய்ந்துமே
பூட்டுமெள்ளெண்ணெய் புகலவே காய்ந்தபின்
சூட்டுந்தயிலம் சுறுக்காய் முழுகிடே. (கசஅ)

முழுகும்போது முசியாப் பெரும்பாடு
வழுகுமிசிவு வாங்காத் திமிர்நோயும்
தழுகும்பாண்டுவுந் தரியா தொடுங்கிடும்
தொழுகுமாந்தர்க்குத் தோன்ற வறைந்ததே. (கசகூ)

பஞ்சமூலித்தயிலம்.

அறையும் பஞ்சமூலித்தயில முரைப்பேன்பார்
வரையுமூலி வகுக்கும் பொடுதலே
நிறையுந்தக்காளி நேர்ந்த முசுக்கையும்
திறையுமயுற்பீலி சேரவே தூக்கிடே. (கரும)

தூக்குங்கொத்தான் துடியாய்ச் சமனெடு
தாக்குமூலி தணியக் கியாழஞ்செய்
நோக்குமெண்ணெய் நொருங்குஞ் சமனெடை
வாக்குதப்பாமல் வாகாகக் காச்சிடே. (கருக)

காய்ச்சிமாயன் கருதும் பதாம்புயம்
மூய்ச்சிடாமல் முழுகவோர் மண்டலம்
போச்சுவியாதி பொரும லீளையறும்
பாச்சுரோகம் பகரும் ரோகம்போமே. (கருஉ)

போமேசூலை பொருந்தும் வாதசூலை
சாமேபிரமியம் சாரா தொருநாளும்
தாமேபித்தமுந் தாண்டிப் பறந்திடும்
நாமேசொன்னோம் நவிலு முனிவரே. (கஙக)

பஞ்சபூசணத்தயிலம்.

முனிவர்வாக்கு முறைபொய்யா தொருநாளும்
கனிவுடன் மதுரம் லவங்கப்பட்டை
தொனியுநன்னாரி தோன்றுங் கருஞ்சீரம்
தனியமான தகுந்த முத்தக்காசே. (கஙச)

காசுடன்சமன் கருத யெடுத்திடு
மாசில்லாத மகிழச சலம்படி
ஊசிநீரு முறையுஞ் சமனதாய்
வாசமெண்ணெய் வகுப்பாய்ச் சமன்கூட்டே. (கஙரு)

கூட்டிப்பாண்டங் குமுற வடித்துமே
பூட்டுமெண்டலம் புகழாய் முழுகிடில்
காடுமேகங் கதறியே யோடிடும்
கோட்டுவாயுங் குலைந்து பறக்குமே. (கஙசு)

பறக்குஞ்சூலை பகருங் கச்ரோகம்
திறக்கும்பிரமியஞ் சேரா தொடுங்கிடும்
நிறக்கும்வியாதி நெருங்கு நேத்திராஞ்சனம்
சிறக்கப்போமெனச் செப்பினர் முனிவரே. (கஙஎ)

பித்தநீரத் தயிலம்.

செப்பும்பித்தந் திறமாக நீங்கிட
ஒப்புஞ்சீரக மோங்கு மதுரமாம்
தப்பில்லாத தனி லவங்கமுடன்
மெப்புங்குடோரி விரும்புங் கொத்தமல்லி. (கஙஅ)

மல்லிசந்த மணக்கு மிருவேலி
கொல்லிமூலி குறிக்கு மகிற்கட்டை
மல்லிகோஷ்டம் வகுக்குங் கருவாவாம்
பல்லிமூலி பகருஞ் சமன் தூக்கே. (கஙகூ)

தூக்கிச்செங்கழுநீர் கொத்த மல்லியாம்
தாக்கிப்பாண்டந் தணியக் கியாழஞ்செய்

போக்கில்லாத பொருந்தும் பசும்பாலாம்
வாக்குத்தப்பாமல் வழங்கு மிளநீரே. (௧௬௰)

நீராம்நிம்பத்தின் பழச்சார் சரியெடை
சாரமூலித் தனியச் சரியெடை
கூராமெண்ணெய் குறித்திடு மவ்விடை
நோய்க்காய்ச்சி நெகிழ வெடுத்திடே (௧௬௧)

எடுத்துவாணி யெழில்பதம் போற்றியே
தொடுத்து மண்டலந் தோன்றமுழுகிடில்
நடித்தரோகம் நவிலுங் கயரோகம்
துடித்தயிருமல் துகன்றோடிப் போகுமே. (௧௬௨)

சிலேத்துமந்தொண்ணூற்றுருக்குத்தயிலம்.

போகுஞ்சேத்துமந் தொண்ணூற் றுறுமற
ஏகுஞ்சந்த மெழிலான நன்னரி
ஆகுங்கோஷ்ட மறைபு மதுரமாம்
வாகுபற்படம் வாகாய்ச் சமன்சேரே. (௧௬௩)

சேர்த்துக்கார்போகஞ் சிறந்த வசலுழுவை
பார்த்துப்பூண்டு பகருங் கருஞ்சீரம்
ஆர்த்துமிளகு அரிய சுக்குடனே
கோர்த்துவிளங்கங் குலாவு முந்திரியே. (௧௬௪)

ஏகும்பட்டை யெழிலான சங்கம்வேர்
ஆகுஞ்சீர மரையுஞ் சல்லிவேர்
பாகுஞ்சரக்கு பகர்ந்த சரியெடை
வாகுபாண்டம் வகையா யிடித்திடே. (௧௬௫)

இடித்துக்கியாழ மெழிலா யிறக்கிடு
அடுத்துமே பசும்பாலிற் சமன்சேரு
தொடுத்து மெள்ளெண்ணெய் தோன்றிடவவ்விடை
சடுத்தமாகத் தனிப்பதங் காச்சிடே. (௧௬௬)

பதமாமெண்ணெய் பகருமோர் மண்டலம்
நிதமாம்வியாதி நெருங்க முழுகிடு
விதமாம்ரோகம் விரும்புஞ் சயரோகம்
மதமாமீளை யொடுங்கிடுஞ் சன்னியே. (௧௬௭)

சன்னிநேத்திரஞ் சாரும் பிடரிநோய்
வன்னிபித்தம் வகுக்குஞ் சயகாசம்
பன்னுரோகம் பகரும் பெருஞ்சூலை
சென்னிநீர்ப்பாய்ச்சல் சேரா தடங்குமே. (கசுஅ)

அடங்குரோக மறையும் பெருரோகம்
முடங்கும்வாயு முயன்ற பிடிப்பறும்
தொடங்குநீர்ப்பாய்ச்சல் தொடரா தடங்கிடும்
அடங்குமாந்தர்க் கறிய வுரைத்ததே. (கசுகூ)

சோகைகாமாலைக்குத்தயிலம்.

உரைக்குஞ்சுக்கு முயர்ந்த மிளகுடன்
திரைக்குமோமந் தெளிந்த சீரகமும்
உரைக்குஞ்சாதிக்கா யோங்கு ரோகணியும்
நிரைக்குந்தேக்கு நிறைந்த வரத்தையே (களய)

அரத்தையிஞ்சி யறையுங் கடுக்காயும்
கரத்தையேலங் கழறும் கிராம்புடன்
குறைத்திடாமல் குறிக்குஞ் சமனதாய்
நிறைத்துமேபலம் நெகிழவே தூக்கிடே. (களக)

தூக்கியேபசும் பாலி லரைத்திடு
தாக்குமெண்ணெய் தனியாய்க் கலந்துமே
போக்கில்லாமற் பொருந்தவே காச்சிடு
நோக்குமனோன்மணித் தாயைப் பணிந்திடே. (களஉ)

பணிந்துபோற்றிப் பகருந் தயிலத்தை
துணிந்துமண்டலந் தோன்ற முழுகிடில்
அணிந்தமேனி யறையுங் காமாலைபோம்
பணிந்தவாய்வு பறந்தோடிப் போகுமே. (களங)

போகுங்குன்மம் பொருந்துநீர்ச் செரிப்பு
ஆகுமக்கினி மந்தம் நெஞ்செரிவு
வேகுமேனி வினைபறந் தோடிடும்
வாகுதன்வந்திரி வகுத்த முறைபாடே. (களச)

பித்தவாந்தி கண்ணோய்த்தீரத்தயிலம்.

பாடும்வாந்தி பகருங் கண்ணோயற
நீடுமாந்தர்க்கு நெருங்கும் பிணியற

கூடும்பொன்னுங் குறிக்குஞ் சிறுகீரை
  ஆடுஞ்சண்பக மரிய சீரகமே. (எரு)

சீரம்பூநாகஞ் சீரந்த மதுரமாம்
  காரமாங் கருஞ்சீரம் நற்கோஷ்டமாம்
சாரமாஞ்சிந்தில் சாற்றுஞ் சண்பகமாம்
  கோரங்கிம்பங் குலாவும் பசும்பாலே. (௧எ௬)

பாலுஞ்சரக்கு பகரு மொருபலம்
  மேலுமவ்விடை மேவுஞ் சரியெடை
நாலுயெள்ணெண்ணெய் நவிலப் பதமதாய்
  சாலுபாண்டங் தனிப்பத மிறக்கிடே. (௧௭௭)

இறக்கியப்பா லெழில்பதம் போற்றியே
  சிறக்கமண்டலஞ் சேர முழுகிடில்
முறக்கமான வியாதி முடியறும்
  பறக்குங்கண்ணோய் பகருந் தயிலமே. (௧எஅ)

பகரும்வாந்தி பகர்பித்தம் நாற்பதும்
  நுகரும்வெட்டை நொறுங்கு மயக்கமும்
தகருஞசேத்துமங் தாண்டிப் பறந்திடும்
  முகருஞ்சோகை மொழியவே நீங்குமே. (௧எ௯)

கண்ணோய்க்குத் தயிலம்.

நீங்குமதுர நெருகுஞ் சண்பகமாம்
  ஓங்குசீர முயர்ந்த வாலுழுவை
வாங்குகார்போக வரிசி தேவதாரம்
  ஆஙகுசந்தன மகிற்கட்டை சேர்த்திடே. (௧அ௰)

சேர்த்துவேலி சிறக்கும் விலாமிச்சு
  பார்த்துவறகன் பகரும் மஞ்சள்
கோர்த்துநொச்சி குலாவுங் கருநொச்சி
  ஆர்த்துசெங்கத் தாரி சமனெடே. (௧அ௧)

எடுத்துமேபசும் பாலி லரைத்திடு
  தொடுத்துமெண்ணெய் துவளக் கலக்கியே
அடுத்துமண்டல மன்பாய் முழுகிடில்
  விடுத்தரணத்தின் வியாதி யகலுமே. (௧அ௨)

அகலுங்கண்ணோ யறையுந் தொண்ணூற்ருறும்
பகலுஞ்சூரியன் பனிபோ லகன்றிடும்
நிகலுஞ்சூலே நெருங்கும் பீனிசம்போம்
சகலுந்தும்மல் கருதுங் கபாலமே. (கஅங)

மேவுநாசிகா பீட ரோகமறும்
காவுதேசிகங் காதினிற் சீழறும்
நாவுதந்தம் நவிலு மரோகமறும்
சாவுஞ்சூலே சனிகுஷ்ட மேகுமே. (கஅச)

சொரிசிரங்குக்குத்தயிலம்.

ஏகுமாந்தர்க் கெழிலாஞ் சொரிசிரங்
காகுநாற்றங் கதறியே யோடிட
ஆகுஞ்சுக்கு வரிய ரோகணியும்
தேகுங்கண்டங் கத்திரியுந் தூக்கிடே. (கஅரு)

தூக்கியெமருந் துடியாம் பெருமருந்
தாக்கிக்கூந்தல் தனியிரு வேலியாம்
போக்கில்லாமற் பொருந்து மிளநீரால்
வாக்குதப்பாமல் வாகா யரைத்திடே. (கஅசு)

அரைத்துமேபசும் பாலிற் சமனெடை
திரைத்தமுக்கண்ணின் பாலுஞ் சரியெடை
உரைத்தயெள்ளெண்ணெய் யோங்கு மிரண்டெடை
கரைத்துமேபாண்டங் கழுவியே யூற்றிடே. (கஅஎ)

ஊற்றிப்பாண்டத்தி லோங்குங் காடாக்கினி
ஆற்றியே தயிலத்தை யிறக்கிமுன்
போற்றியீசனுர் பொற்பதத் தாள்பணிந்
தேற்றி தீபதூபமுங் கொடுத்திடே. (கஅஅ)

கொடுத்துமண்டலங் குமுற முழுகிடில்
அடுத்துமேக சிறங்கு முதலறும்
தொடுத்துமேசொரி தோன்று தொடங்கிடும்
லடுத்ததன்வந்திரி வரக்கு பொய்யாதிதே. (கஅக)

பொய்யாதையா புகலுந் தன்வந்திரி
அய்யாபத்திய மன்பா யுரைக்கிறேன்

மெய்யாய்வெள்ளாட் டிறைச்சி யுப்புக்கண்டம்
துய்யாநெய்யுந் துவளவே கூட்டிடே. (கசுo)

கூட்டுமேபசும் பசசைப் பயறுடன்
நீட்டுமுள்ளங்கி நேர்ந்த பசும்பாலும்
ஆட்டுமூளை யறையும் புருமுதல்
கூட்டுமாந்தர்க்குக் குலாவ் வறைந்ததே. (கசுக)

மேகம்-உக-க்கு-தயிலம்.

அறையுமேக மலறியே யோடுதற்
குறையும்பத்திரி கூறுங கிராம்புடன்
நிறையுஞ்சாதிக்காய் நேர்ந்த பறங்கியு
மறையும்வேலி மதிப்பாகத் தூக்கிடே. (கசுஉ)

தூக்கிகோஷ்டமுந் துய்ய முத்தமுடன்
தாக்குந்தாளிசந் தனியா மிலாமிச்சு
தேக்குமாஞ்சில் திறமான சீந்திலும்
வாக்குதப்பாமல் வகையாய்ச் சமனெடே. (கசுங)

எடுத்துமே பசும்பாலி லரைத்திடு
தொடுத்துமெள்ளெண்ணெய் தோன்றவே நாலெடை
விடுத்தசெவ்விள நீரதிற பாதிடை
அடுத்தநிம்பத்தின் சாற்றிற்கால் கூட்டிடே. (கசுச)

கூட்டிப்பாண்டங் குமுறவே யூற்றிடு
நீட்டித்தீபாக் கினியா யெரித்திடு
பூட்டியேபதம் புகலவே காய்ச்சிடு
சூட்டிமாயன் றுகள்பதம் போற்றிடே. (கசுரு)

போற்றியெண்ணெய் புகலுமோர் மண்டலம்
ஆற்றிவார மறையு மிருமுறை
சாற்றுஞ்சித்தர் தனிவாக்கு பொய்யாமல்
போற்றியிருமுறை பொருந்த முழுகிடே. (கசுசா)

பொருந்தயெண்ணெய் புகழாய் வியாதிபோம்
குருந்தும்பிரமியங் குறுகி யடங்கிடும்
திருந்துரோகமுந் தீராப் பிணியறும்
சொரிந்துமேபடை சுருக்காய்ப் பறக்குமே. (கசுஎ)

பறக்குமென்றல்லோ பாடினு ரென்குரு
 பறக்குமென்றல்லோ பாடினு ரென்முனி
பறக்குமென்றல்லோ பாடினர் சித்தரும்
 பறக்குமென்றல்லோ பாடினர் மாந்தர்க்கே. (௧௯௮)

சகல வாய்வுக்குந் தயிலம்.

மாந்தர்க்காக வரைகிறேன் தயிலங்கேள்
 ஆர்ந்தசி ரமரிய திப்பிலியும்
போர்ந்தசுக்கு பொருந்து நற்சீரகம்
 தேர்ந்தமிளகு சிறந்த திப்பிலியே. (௧௯௯)

சிறந்தவிளங்கஞ் சிறிய தான்றிக்காயும்
 வறந்தகெல்லி வகுக்கு மாசிக்காயும்
பறந்தரோசன் பகர் கடுக்காயுடன்
 துறந்தகன்னுரி தோன்றச் சமன்கூட்டே. (௨௦௦)

கூட்டுபொச்சிக் கியாழத்திற் ருனரை
 பாட்டுமே பசும்பாலிற் சமனெடு
ஆட்டும் வேப்பெண்ணெ யன்பாயதிற்பாதி
 கூட்டுமெள்ளெண்ணெய் குறிப்பாய் நாலுகூட்டே. (௨௦௧)

கூட்டிப்பாண்டங் குழுறவே காச்சிடு
 நீட்டிமண்டலம் கோாய் முழுகிடு
வாட்டுகுன்ம மவரைகடந் தோடிடும்
 மாட்டும்வதா மரைந்தோடிப் போகுமே. (௨௦௨)

போகும்வாயுவு பொல்லாக் கழல்வாதம்
 ஏகும்வாயு விறங்கும் நரிவாதம்
பாகுமவர்தம் பகரும் பட்சவாதம்
 நோகுமண்டத்தின் வாயு வகலுமே. (௨௦௩)

சூரிவித்துத் தயிலம்.

அகலுமாந்தர்க் கறையுந் தயிலங்கேள்
 நிகலுமே சூரிவித்து நசபலம்
புகலுமேபாண்டம் பொதிந்து விடித்துமே
 தகலுமே தனிவிறகா லெரித்திடே. (௨௦௪)

எரித்துமே யதிலெண்ண யொருநாழி
   பொரித்துமே கற்கம் புகலுமுறைசேரு
அரித்துமே யாறுமாதக் காடிநாழி
   கரித்துமேசுக்கு கடுகவோர் பலமிடே. (௨௱௫)

இட்டேயடுப்பி விதமெழு சானபின்
   தொட்டேயோர் மண்டலங் தோன்றமுழுகிடில்
விட்டேயகன்றிடும் விருன கிரந்தியும்
   பட்டேயோடி மடுபாழான குட்டமே. (௨௱௬)

குட்டமுடன் சூலைகுன்மம் பதினெட்டும்
   திட்டமுடன் கிராணிதிறமான வுள்மூலம்
கெட்டசூடு முதல்கெக்கரித் தோடிடும்
   சட்டமாகவே சாற்றின துண்மையே. (௨௱௭)

உண்மையான மலக்கட் டகன்றிடும்
   தண்மையான சகல வியாதியும்
கண்மையாகவே கலங்கிப் பறந்திடும்
   வண்மையாக வகுத்தார் முனிவரே. (௨௱௮)

கீழ்க்காய்நெல்லித் தயிலம்.

முனிவர்வகுத்த முறையான தயிலங்கேள்
   கனிவாய்க் கீழ்க்காய்நெல்லிக் கருதுசமனதாய்
நனியா திடித்துநல் லாற்றுநீர்விட்டு
   முனியாய்க் கியாழமுயற்சி யாய்ச்செய்திடே. (௨௱௯)

செய்துமே யெட்டொன்றாய்ச் சிறக்கவேகாச்சிடு
   வைதுமே யெள்ளெண்ணெய் வாகாய்ப்படிரண்டு
பெய்துமேசர்க்கரை புகழாய்ப் பலமைந்து
   நைதுமெண்ணெய் நலமாகக் காச்சிடே. (௨௱௰)

நீரும்வியாதி.

காச்சுமண்டலங் கருத முழுகிடில்
   போச்சுபித்தம் புகலும் வாதமறும்
நீச்சுவாந்தி நெடிய கபமறும்
   ஆச்சுதைல மறைந்தார் முனிவரே. (௨௧௧)

காசரோகத் தயிலம்.

முனிவராயுறு வேத முறையிது
கனிவுடன் காசரோகத் தயிலங்கேள்
வனியும்கன்னரி வரையுங் கோடாசிலே
தனியன் மூலமுஞ் சாற்றுமறுகெடே. (உ௧உ)

எடுத்துகன்னரி யெழிலான சுக்குடன்
தொடுத்த பூஞ்சாங்கு தோன்றுங்கிளியூறல்
அடுத்தகொம் பறக்கான செஞ்சந்தனம்
கொடுத்துப்பாண்டங் குமுறப் பொதிக்கிடே. (உ௧௩)

பொதிக்துமேசலம் போற்று மறுகாழி
வதிக்துங் கியாழும்வளமாகக் காச்சியே
கதிந்துமண்டலங் கனிப்பாய் முழுகிடில்
கொதிந்தமேனி கொதிப்பு மடங்குமே. (உ௧௪)

அடங்கும்ரோக மறையுங் காசரோகந்
தொடங்குமேகந் தொல்லைப் பிரமேகம்
நடுங்குங்காச்சல் நவிலும் பித்தரோகம்
ஒடுங்குமேனி யுடல் தளிர்காணுமே. (உ௧௫)

காணும்வெள்ளை கருதுங் கயரோகம்
தோணும்வாங்கி தொடரும் பித்தரத்தம்
ஊணுமூல வியாதிப் பிணியறும்
சாணுமேனிச் சடப்பிணி போகுமே. (உ௧௬)

போகும்பத்தியம் புகலுங் காடைபுறு
ஆகுமிறைச்சி யரியவுப்புக் கண்டம்
வாகுங்கச்சல் வகுர்கு முருங்கையும்
பாகுஞ்சிதளப் பண்ட மகற்றிடே. (உ௧௭)

கிராணிக்குத்தயிலம்.

அகற்றுங்கிராணிக் கறையுந் தயிலங்கேள்
புகற்றும்பத்திரி போற்றுஞ் சாதிக்காயும்
நிகற்றும்லவங்கம் நேருங் கசகசா
சகற்றும்விடையஞ் சாற்றுஞ் சமன்தூக்கே. (உ௰அ)

தூக்கிப்பாண்டத்திற் றுய்ய கொறுக்கிடு
  தாக்கியேசலந் தண்ணீ ரறுபடி
போக்கில்லாமற் பொருந்தக் கியாழஞ்செய்
  வாக்குத் தப்பாமல் வாலுமுவையெடே. (௨௰௯)

எடுத்துக்கியாழ மெழிலா யரைத்துமே
  தொடுத்தவாமணக் கெண்ணெ யொருநாழி
விடுத்தவெள்ளெண்ணெய் மேவு மிருநாழி
  அடுத்தபாண்டத்தி லன்பாகக் காச்சிடே. (௨௨௰)

காய்ச்சியம்பாள் வருது மனோன்மணி
  ஆச்சிபாத மடிவணங்கித் தொழு
மூச்சிடாமல் முழுகுமோர் மண்டலம்
  வீச்சுங்கிராணி விரைந்தோடிப் போகுமே. (௨௨௧)

போகுங்கிராணி புகலு மதிசாரம்
  ஏகும்பாண்டு மெழும்பு நீராம்பலும்
வாகுபித்தம் வரையுங் காடுறங்கும்
  போகமாமுனி புகன்றனர் சித்தரே. (௨௨௨)

சித்தர்வாக்குத் திசையிலும் பொய்யாது
  பத்தர்மாந்தர்க்குப் பகரு மொருமுறை
சித்தமிரங்கித் தெளிய வுரைத்திட்டேன்
  நித்தஞானி நெகிழ வறிந்திடீர். (௨௨௩)

கிமிர்ப்படைக்குத்தயிலம்.

அறிந்தபோது அறையு மொருபாகம்
  செறிந்ததாமரை சேரும் வெண்துளசி
முறிந்தவேம்பு முயலும் நிலவேம்பு
  தறிந்ததிப்பிலி சாற்றும் பருத்தியே. (௨௨௪)

பருத்திவெந்தோன்றி பகரும் நாகமல்லி
  சிறுத்தசந்தனஞ் சிறந்த பொன்னுங்கண்ணி
தரித்தபுள்ளடி தாங்குஞ் சமுத்திரா
  ஒருத்தர்சொல்லவும் வேணும் பறங்கியே. (௨௨௫)

பறங்கியாச்சா பகருஞ் சுரையுடன்
  அறங்கமான வறையும் புல்லுருவி

முறங்கமாக மூகிழ்சிறு மாஞ்சியும்
 துறங்கமாகவே தோன்று மேலந்தானே. (௨௨௬)

ஏலம்பட்டை யெழிலா மெட்டிக்கொட்டை
 வேலம்பட்டை விரும்புங் கருவாவும்
சாலமேபுகழ் தாங்கும் பூனைக்காலி
 கோலந்தில்லையாங் கூறச் சமன்கூட்டே. (௨௨௭)

கூட்டிப்பாண்டங் குலாவி யிடித்துமே
 நீட்டிக்கியாழம் நெருங்கவே காச்சிடு
பூட்டுமெண்ணெய் புகலுஞ் சரியெடை
 தீட்டுமேபதந் திறமா யிறக்கிடே. (௨௨௮)

இறக்கியம்பா ளெழிலடி போற்றியே
 உறக்கமண்டல முற்று முழுகிடில்
கறக்கும்வியாதி கழறுந் திரிபலை
 பறக்குமென்றலவோ் பாடினர் முனிவரே. (௨௨௯)

சூசிகாவாயுவுக்குத்தயிலம்.

முனிவர்வாக்கு முழுமையும் பொய்யாது
 கனிவுடன்மாந்தர் கழறும் வாயுவுக்கு
வனிதனுவலின் பட்டை விடையமாம்
 தனியனுரை தழைக்கோரை கொன்றையே. (௨௩௰)

கொன்றைதிப்பிலி கூறுங் கொல்லங்கோவை
 அன்றெரித்தா னறையு மரத்தையாம்
குன்றுநெல்லி குலாவும் நிலவாகை
 தன்றுபுன்கு தனிமா விலிங்கையே. (௨௩௧)

விலங்குதொண்டை விரும்புங் கரும்புடன்
 அலம்புஞ்சிந்திலி னுவாரை பஞ்சாங்கம்
புலம்புமேசுரை புகலு மரசுடன்
 சலம்புமுட்டியுந் தனியச் சமனெடே. (௨௩௨)

எடுத்துப்பாளை யெழிலான சந்தனம்
 அடுத்ததாமரை யான விரிபலை
தொடுத்தலூரையுந் தோன்றப் புளிமாவும்
 கிடுத்தழுங்கிலின் விரும்பு மெட்டியே. (௨௩௩)

எட்டிநீர்ச்சுண்டி யெழிலாம் பூனைக்காலி
   கட்டியானகல் கருதும் விடத்தேறி
தொட்டிதும்பை துடரு நெருஞ்சிலும்
   மட்டிப்பாலும் வளமாகத் தூக்கிடே. (உ௩௪)

தூக்கிவெட்டிவேர் துய்ய காத்தொட்டி
   தாக்குகஸ்தூரி தனியா மரமஞ்சள்
போக்கில்லாத பெருங்காய நீர்முள்ளி
   வாக்குதப்பாமல் வன்கடம்பன் கூட்டே. (உ௩௫)

கூட்டிநாயகங் குலவுஞ் சிலந்தியாம்
   நீட்டுவெந்தயம் நேரும் பெருமருந்
தாட்டிநன்னாரி தகுந்த வெட்பாலையாம்
   வாட்டிநொச்சி வகுக்கின்ற முல்லையே. (உ௩௬)

முல்லைநான்றி முழுகி மிலந்தையாம்
   அல்லிமாஞ்சி லரிய கடம்பனும்
மல்லியின்பூரா மணக்கும் விலாமிச்சு
   கொல்லிகோஷ்டமுங் கூறு மதுரமே. (உ௩௭)

கூறும்வேலி குறிக்குஞ் சதாவேலி
   நீறும்வில்வம் நிகழும்காய் வேளையாம்
தூறுந்துத்தியுந் தோன்றச் சமூலமாம்
   ஆறுமிரஞ்சன மழகாகச் சேர்த்திடே. (உ௩௮)

சேர்த்துவொன்றாய்ச் சிறக்க யிடித்துமே
   பார்த்துப்பாண்டம் பதமாய்ப் பொதிந்திடு
ஆர்த்துமேசல மாயிரு நாழியாம்
   கோர்த்துக் கியாழுங் குலாவியிறக்கிடே. (உ௩௯)

இறக்கிக்கியாழ மெழிலாய் வடிசெய்து
   சிறக்குமெள்ளெண்ணெய் சேர்த்திடு மவ்விலை
திறக்குமாமணக் கெண்ணெயாம் பாலிடை
   உறக்கமூன்றையு மொன்றாய்க் கலந்திடே. (உ௪0)

இட்டேயெண்ணெ யெழில்பதங் காச்சிடு
   கட்டாய் மண்டலங் கருதமுழுகிடில்
திட்டமாய் சூதவாயுவுந் தானறும்
   சட்டமாக தன்வந்திரி யுரைத்ததே. (உ௪௧)

உரைத்தார் மாமுனியுற்ற வாயுர்வேதம்
திரைத்த நாலாயிரத்துச் சில்வாணமும்
வரைத்தமேபிணி வாகாய் வினையறும்
குரைத்திடாது குறிக்குந் தயிலமே. (உசஉ)

குறிக்கும்பத்தியங் கூறும்புளி தள்ளு
தெறிக்கும் வெள்ளாட்டிறைச்சி யுப்புக்கண்டம்
முறிக்குமகாடை முயலும் புறுவாகும்
தெறிக்கும் வவ்வாலுந் திறமாக வுண்டிடே. (உசக)

சிரகத்தயிலம்.

உண்டபோது வுடலை விட்டேகவே
கண்டுமேசிரங் கழறுநற் றைலமாம்
அண்டுநற்சிர மறையுந் தசபலம்
விண்டுமதுரம் விளம்பிடக் காலேடே. (உசச)

எடுத்துமே யெலுமிச்சம் பழத்தினில்
தொடுத்துமே சாமந்துவள வரைத்திடு
கடுத்துமே பசும்பாலி லரைத்திடு
அடுத்த யெள்ளெண்ணெ யன்பாகக்கூட்டிடே. (உசரு)

கூட்டிப்பாண்டங் குலாவிப் பதம்வடி
நீண்டுமண்டலம் நோய் முழுகிடில்
பூட்டுமேகம் புகலப் பறந்திடும்
வாட்டுநீர்ப்பாச்சல் வரைந்தோடிப் போகுமே. (உசசு)

போகும்பித்தமும் பொருமலுடன் வாய்வு
ஏகும்வெட்டை யெழிலான ரோகமும்
சாகுமபிரமியந் தணிவா வழலையும்
நோகுங்கண்ணோய் நொறுங்கியே யோடுமே. (உசஎ)

கிச்சிலித் தயிலம்.

ஓடுமாந்தர்க் குறையுந் தலைவலி
நீடுமுடலைவிட் டேகுதற் கெண்ணெயொன்
றூடுமே தயிலமு முரைக்கிறேன்
பாடுகிச்சிலிப் பழம் நூறு தூக்கிடே. (உசஅ)

தூக்குமேபழச் சாற்றைப் பிழிந்துமே
தாக்குமே கருஞ்சீர மதுரமாம்

நோக்கும்வில்வமும் நொறுங்கு மேலமுடன்
போக்குவமுரும் புகல வெடித்திடே. (௨௪௯)

எடுத்துமேயெடை யொன்று யொருபலம்
அடுத்துமேபழச் சாற்று லரைத்திடு
தொடுத்துமேபசும் பாலிற் கலக்கியே
கொடுத்துமெள்ளெண்ணெய் கூறச் சமன்றூக்கே. (௨௫௰)

கூட்டிப்பாண்டங் குமுறவே காச்சிடு
நீட்டிமண்டலம் நெருக்க முழுகிடில்
பூட்டும்பிரமியம் புகலப் பறந்திடும்
வாட்டும்ரோகம் வறையுங் கிரந்தியே. (௨௫௧)

கிரந்திமேசிரங் கேங்கிப் பறந்திடும்
நிறந்தர்மாய் நெருங்குங் கபாலநோய்
வரந்தவாய் நீரருகலும் பித்தமும்
சிறந்தகாசமும் சேர்ந்த விரும்பாலே. (௨௫௨)

இருமலீளை யிசையுங் கபமுதல்
பொருமல்வாந்தியும் புகலு ம்யக்கமும்
கருமவழலையுங் காணு தொடங்கிடும்
பருகநேத்திர வாய்வு மகலுமே. (௨௫௩)

எலுமிச்சம்பழத்தயிலம்.

அகலுமாங்நர்க் கறைவேன் றயிலமோன்
றிகலுமெலுமிச்சங் காயது நூறதாம்
புகலச்சாறதனைப் பூட்டிப் பிழிந்துமே
நிகலும்நன்னுரி நோயப் பலமெடே. (௨௫௪)

எடுத்துவேலி யெழிலாம் விலாமிச்சு
கொடுத்தமதுரமுங் கூறுநற்சந்தனம்
அடுத்தவாலுழுவை யகிற கட்டையாம்
விடுத்துநிம்பத்தின் சாற்று லரைத்திடே. (௨௫௫)

அரைத்துமே யிளநீரிற் கலக்கியே
திரைத்தயெள்ளெண்ணெய் சேரச் சமனதாய்
குறைத்தவாமணக் கெண்ணெயுங் காலதாய்
உரைத்தமூன்றையு மொன்றாகக் காச்சிடே (௨௫௬)

காச்சியேபதங் கருத வடித்திடு
ஆச்சிபாதமடி வணங்கித் தொழு
மூச்சிடாமல் முசியவோர் மண்டலம்
தேச்சிமுழ்கத் தெறிக்கும் வியாதியே. (உ௫எ)

தெறிக்கும்பித்தந் தெளிந்திடு மூர்ச்சையாம்
கறிக்கும்நேத்திரங் கண்ணல் கீழுறும்
முறிக்குங்கைகால் முயன்ற வெரிச்சலும்
தரித்திடாமல் தரணி விட்டோடுமே. (உ௫அ)

ஓடுங்காச்ச லுறையுங் கிரந்தியும்
நீடும்வாதக் குடச்சலுந் தானறும்
சூடுமேனி சுகிக்கத் தழலறும்
பாடுமாமுனி பகர்ந்தது வுண்மையே. (உ௫௯)

கோரோசனைத்தயிலம்.

உண்மைகேளு முறைமையாய் மாந்தர்க்கு
தண்மைகோ ரோசனந் தாமொருபலம்
வெண்மையான விரும்புநல் வெண்ணையாம்
நண்மையாகவே நவிலப் பலந்தூக்கே. (உ௬ ௦)

தூக்கியமனைக் கெண்ணை தசபலம்
தாக்குமெள்ளெண்ணெய் தனியவே யவ்விடை
போக்கில்லாமற் பொருந்த விருவிடை
நோக்கிவெண்ணெயில் நுவல வரைத்திடே. (உ௬க)

அரைத்துமுக்கூட்டு யெண்ணெய் கலக்கிடு
திரைத்தமாகவே திறமாகக் காச்சிடு
முறைதப்பாமலே முசியால் முழுகிடு
நிறையும்வியாதி நெருங்கப் பறக்குமே. (உ௬உ)

பறக்குஞ்சன்னி பகரப் பதின்மூன்றும்
திறக்கமானதோர் தேர்ந்த காசரோகம்
செறக்கப்பித்தமுஞ் சேர்ந்த கழல்வாதம்
வறக்குங்கிரந்தி வரைந் தோடிப்போகுமே (உ௬௩)

போகும்வெட்டையும் பொல்லாத நீராம்பல்
ஏகுங்கிராணி யெழிலான குன்மமும்

வாகுமேசொரி வழங்கும் பெருஞ்சொரி
போகுமென்று புகன்றனர் முனிவரே. (உ௬௪)

கஸ்தூரி தயிலம்.

முனிவர்வாக்கு முறைபொய்யா தொருநாளும்
கனிவுடனே கஸ்தூரியோர் வராகனும்
தனியவேபசும் பாலா லரைத்துமே
வனிதமாயெண்ணெய் வறையு மாமணக்கே. (உ௬ரு)

ஆமணக்கு மறையுந் தயிலத்தில்
பூமணக்கவே புகலவே காச்சிடு
தாமணக்குந் தனிய வித்தயிலத்தை
வாமணக்கவே வளமாய் முழுகிடே. (உ௬௬)

மூழ்கும்போது முறையும் பெருரோகம்
நீழுங்காந்தல் நெருங்குங் கபரோகம்
பாழுமேனி பகரும் பொன்னிறமாம்
வாழுமண்டல மன்பாய் முழுகிடே. (உ௬௭)

குங்குமப்பூத்தயிலம்.

முழுகுமாந்தர்க்கு முறைபொய்யா தொருநாளும்
வழுகுங்குங்குமம் வாகா யொருபலம்
பழுகவெண்ணெயிற் பாங்கா யரைத்துமே
தொழுகுமாமணக் கெண்ணெயிற் காச்சிடே. (உ௬அ)

காசசியேபதங் கமழ விறக்கிடு
தேச்சுமண்டலந் திறமாய் முழுகிடில்
போச்சுநாசியிற் புகலும் பீனிசமும்
ஆச்சியம்பா ளறைந்த முறையிதே. (உ௬௯)

அறைந்தார்மாமுனி யாயுறு வேதத்தில்
கறைந்தாருண்மையைக் கழறும் வட நூலில்
திறந்தார்பாகங்கள் தீரவே மாந்தர்க்கு
சிறந்தயிலங்கள் சிறக்கு மின்னூலாமே. (உ௭0).

சன்னிபதின்மூன்றுக்குமேற்பூசும் சாம்பிராணித்தயிலம்.

நூலாஞ்சித்தர் நுகன்றிட்டார் மாமுனி
காலாஞ்சாம்பிராணி கழறு மரக்குடன்

வேலாம்வேப்பெண்ணே விரும்புந் தசபலம்
சாலாமூன்றையுந் தனிவாலே யிறக்கிடே. (உஎக)

இறக்குந்தயிலமெழி லாகப் பூசிடில்
பறக்குஞ்சன்னி பகரும் பதிமூன்றும்
சிறக்கயிசிவு சேரப் பறந்திடும்
உறக்கமான உயர்ந்த முறையிதே. (உஎஉ)

கர்ப்பூரத்தயிலம்.

முறையாம்பாக முறைக்கிறேன் மாந்தர்க்கு
நிறையாங்கற்பூரம் நேருமா லாத்தியாம்
பறையாமுப்பு பகரும் வெடியுப்பு
துறையாமிளகு தோன்றச் சரியெடே. (உஎங)

எடுத்துக்காட்டா மணக்கன் பாலிலரை
கொடுத்துமேகுழி தயில மிறக்கிடு
அடுத்தசன்னிக் கியன்பாகப் பூசிடில்
படுத்தவியாதி புகலப் பறக்குமே. (உஎச)

பறக்குமென்றல்லோ பாடினர் மாமுனி
பறக்குமென்றல்லோ பாடினர் சித்தரும்
பறக்குமென்றல்லோ பாடினர் மாந்தர்க்கு
பறக்குமென்றல்லோ பகர்ந்தா ரிஷிகளே. (உஎரு)

பகர்ந்தேன் தயிலம் பகருமைஞ் ஞூறதாம்
பகர்ந்தேன்லேகியம் பகருமைஞ் ஞூறதாம்
பகர்ந்தேன்செந்தூரம் பகருமைஞ் ஞூறதாம்
பகர்ந்தேன்பற்பம் பகருமைஞ் ஞூறுமே. (உஎசா)

ஐஞ்ஞூறேடு வறைந்தேன் கியாழமும்
ஐஞ்ஞூறேடு வறைந்தேன் கிருதமும்
பன்னூலெல்லாம் பகர்ந்து திரட்டியே
இன்னூல்மாந்தர்க் கெடுத்து வுறைத்ததே. (உஎஎ)

அண்டவாதத் தயிலம்.

உரைத்தேன் மாந்தர்க்கு வுற்றதயிலமொன்
றிரைத்தேன் வாதத்தினண்டப் பிணியற

கரைத்தவெள்ளுள்ளி கழறுங் கழல்பருப்
பரைத்திகாயமும் பாங்காகத் தூக்கிடே. (உஎஅ)

தூக்கிச்சிற்றண்டர் தோன்ற விருபதும்
தாக்குமாமணக் கெண்ணெயிற் காச்சியே
போக்கில்லாமற் பொருந்த வடித்திடு
வாக்குதப்பாமல் வாகாகப் பூசிடே. (உஎகூ)

பூசியே பூவரசின் மூலியிலை
கூசிடாமல் குழுறவே கட்டிடு
வாசிநீர்வற்றி வாகாய்ப் பிணியறும்
தேசில்மாந்தர்க்குத் தெளியச் செப்பினதே. (உஅ0)

காமாலைக்குத் தயிலம்.

செப்புங்காமாலை சிறக்கு மனிதர்க்கு
ஒப்புங்கையா னுயர்ந்த மிளகுடன்
அப்புஞ்சிர மறையு மதுரமாம்
கப்புமஞ்சளுங் காணச் சமன்சேரே. (உஅக)

சேர்த்துநீர்முள்ளிச் சாற்று லரைத்திடு
பார்த்துமே பசும்பாலிற் சமனெடை
கோர்த்துமெண்ணெய் குலாவு மவ்விடையாம்
சார்ந்துபாண்டங் தனிப்பதங் காச்சிடே. (உஅஉ)

பதமாமெழுகு பதத்தில் வடித்திடு
நிதமாம்வார மிருமுறை தப்பாது
சதமாமண்டலஞ் சார்ந்து முழுகிடில்
அதமாய்ப்போகு மறையுங் காமாலையே. (உஅங)

சசசஅ-வியாதிக்கும்-ஏகமூலித்தயிலம்.

மாலையாந்தயிலம் முறையோர் பாகம்
காலைமல்லி கருதுங் தொரட்டியும்
வேலைநொச்சி விரும்பு முசுக்கையும்
ஆலைநெல்லி யறையும் பற்பாடமே. (உஅச)

பாடம்வேலிப் பருத்தி யுத்தாமணி
நீடகத்தி நெருங்குங் காக்கணமாம்
பூடகத்திப் புகழுஞ் செவ்வகத்தி
ஆடங்கத்திரி யறையும் வுடுப்பையே. (உஅரு)

உடுப்பைதொண்டை யுரைக்கு மாடாதோடை
  கொடுப்பைமூலி குமிக்கு நற்பாலையாம்
வடுப்பை யூமத்தை வளரு மிசங்குடன்
  தொடுப்பையானதோர் தோன்றுந் துராப்பூண்டே. ()

பூண்டுவேலி புகலுங் கட்டுக்கொடி
  ஆண்டுசென்ற வறையும் பெருவேம்பு
நீண்டுசென்ற நெடிய வசலையும்
  தீண்டுபூராவுஞ் சேர்த்திடு தோடையே. (உஅஎ)

தோடைதுய்யானுந் தோன்று மறுசனும்
  ஆடையொட்டி யலரி யாற்றலரி
நீடுங்குப்பி நெடியசக்கங் குப்பி
  தேடுமேனி தெளிந்த வெட்பாலையே. (உஅஅ)

பாலைமூலை பகருங் குறிஞ்சானும்
  ஆலைபுன்கு மறையு மூமத்தையும்
வாலைபீநாறி வகுக்கும் வெள்ளறுகுடன்
  சோலைமுசுட்டை தொடரும் நிலவேம்பே. (உஅகூ)

வேம்புயெழுத்தாணி விரும்புஞ் சாணுக்கியும்
  பாம்புமூலி பகரு நன்முல்லையாம்
தீங்குசெய்யாத தேர்ந்த பொன்னுக்கண்ணி
  ஓங்கு கையானு கரும்பூனைக்காலி. (உகூ0)

காலிமூலி பகரும் பெருமூலி
  நீலிபத்திரி நெருங்கும் பெருங்குமிழ்
சோவிமிட்டான்சிறந்தபிரமியும் வாகுகொன்றை வகுக்குங்
  நீலிமூலி நெருங்குக் தூதுளையே. [கிளாவுடன்

தூதுவாகை துடிக்கும் பெருவாகை
  வாது துளசி வகுக்கு மா துளையாம்
நீதுமெட்டி நெருங்கு மாவாரையாம்
  சாதுமேபனை சாற்று முருங்கையே. (உகூஉ)

முருங்கை காக்கணமுயலுஞ் சிறுகளா
  கருங்கைகோவை கழறுஞ் செங்காலியாம்
பருங்கையுருவி பகரும் நற்புன்குடன்
  பெருங்கைபாகிரி பெருகு நல்வில்வமே. (உகூ௩)

வில்வம்பாசி விரும்புங் கட்ற்பாசி
கொல்லிமூலி குறிக்குங் கலிகமாம்
வல்லிமல்லி வகுக்கு நாகமல்லி
வில்லினேசை விளங்குங் கிலுப்பையே. (௨௬௪)

விளங்குங்கருணை மேவுங் கடம்பமாம்
தளும்புங் காக்கணந்தாங்கும் விடமூங்கில்
பளும்புகோங்கு பகருங் கற்றாழையாம்
நளும்புவீழியும் நாட்டில் பேயத்தியே. (௨௬௫)

அத்திகோரை யறையுந் தேள்கொடுக்கும்
சத்திமூலி சதாசிவன் மூலியும்
துத்திமூலியுந் தோன்று மருக்காரை
வெத்திகொள்ளும் விரும்பும் பேய்க்கும்மட்டி. (௨௬௬)

குமட்டிநாளை கூறும் புல்லுருவி
அமட்டி காயத்திரி கருங்காலியாம்
சமட்டிபாகலுஞ் சாற்றுகாஞ் சோறியும்
கமட்டிவாழை காணுங்கீரை மூலியே. (௨௬௭)

மூலிகார்கோழி மூயலுங்காற் பாசமாம்
சோலிகாலகஞ் சோரும் புனல்முருங்
காலிகுவளை காட்டுக் கொழிஞ்சியாம்
வேலிக்கரி விரும்பும் பிரண்டையே. (௨௬௮)

பிரண்டைகூந்தல் பிறங்கு பாதிரியாம்
கரண்டைகோட சோலை கமுகுடன்
அரண்டைதாமரை யறையும் நாணல்குன்றி
பாண்டைதோன்றி பகரும் பூசனியே. (௨௬௯)

பகரும்நாளை பாட்டுங் தாளிசமாம்
நுகருந்தும்பை நுணாவுடன் காட்டத்தி
நகருஞ்சின்னியும் நன்மாவி லிங்குடன்
தகருந்தேக்குடன் தாங்குஞ் சிவதையே. (கூா)

சிவதைநிலவாகை சேர்ந்த நிலக்கடம்
பவதைகூரண்டம் பகருஞ் செம்பூவுடன்
அவதைகுறிஞ்சான் றையுங் குருக்கத்தி
கவரை வெந்தோன்றி நாட்டில் பேய்ச்சுரையே. (கூாக)

சுரையாங்காவட்டம் பூண்டு மிஞ்சியுடன்
நரையாஞ்சிறுதாளி நவிலுஞ் சிறுகாஞ்சி
சுரையாம்வெள்ளெலி தோற்றும் கோங்குடனே
பரையாம்துராவுடன் பகருஞ் சாணுக்கியே. (கஎஉ)

சாணுப்பூண்டு தரிக்கும் பேய்மிரட்டி
காணுமூலி கழறுந் தேள்கொடுக்கு
தோணுச்செங்கழு நீர்முள்ளி செங்கீரை
நாணுக்கொழுந்து நாட்டும் சோகமே. (கஎக)

நாட்டும்நாய்வேளை நவிலும் வெள்ளாம்பலும்
கூட்டும்வெற்றிலை கூறுங் கொடிமூலம்
நீட்டுமூலி நிகழும் நஞ்சறுப்பான்
கோட்டுநெருஞ்சி குறிக்குங் கடம்பமே. (கஎச)

கடம்பங்கோரக்கர் கருது மூலிகையாம்
தடம்பம்பண்ணை தவிக்குங் கோழிக்கொடி
சடம்பமாமூலி சாற்றுஞ் சிதேவியாம்
அடம்படரு மறையுங் களாப்பூவே. (கஎரு)

பூவுடசதாமூர்க்கன் தண்ணீர் மிட்டான்
நாவுநீர்ச்சுண்டி நவிலி மரிநெல்லி
பாவுந்தைவேளை பகருஞ் சடாதரி
ஆவுஞ்சடைச்சி யறையு மெருக்கையே. (கஎசு)

எருக்கைமூலி யெழிலாங் கவிழ்தும்மை
மருக்கைமுன்னை மகிக்குங் கொழுந்துடன்
பருக்கைவன்னியும் பகருஞ் சடைக்கஞ்சா
சருகையான சமுத்திரோ தயங்கூட்டே. (கஎஎ)

கூட்டிவாத மடக்கி பெருமூலி
நீட்டுமுள்ளங்கி நிகழுஞ் செம்பருத்தி
காட்டுநொசிக் கருந் துளசியுடன்
பூட்டுமூலி புகலச் சமனதாய்
ஆட்டிச்சாற்களை யன்பாய்ப் பிழிந்திடே. (கஎஅ)

இட்டேசாற்றை யெழிலான பாண்டத்தில்
திட்டமாகவே சேர வார்த்திடு

கட்டுமெள்ளெண்ணெய் கருது மவ்விடையாம்
 சட்டமாகவே தனிப்பதங் காச்சிடே. (௩௱௯)

காச்சியேமெழுகு பதம் வடித்து
 ஆச்சிபாதமடி வணங்கிப் போற்றி
மூச்சுதப்பாமல் முசியவோர் மண்டலம்
 காச்சியெண்ணெயில் கடுகத் தானஞ்செய்யே. (௩௱௰)

செய்யும்போது திறமாய்ப் பிணியறும்
 வையுமீளை வஸ்ரயும் பெருமீளை
தொய்யுங்காந்தலுந் தோன்று மிருமலும்
 பெய்யுங்கண்ணீர் பெரும்பாச்ச லோடுமே. (௩௱௧)

ஓடுங்குன்ம முறையும் பதினெட்டு
 நீடுமாந்தம் நிகலும் பெருமாந்தம்
கூடுங்குன்மங் குரைநோய் பெருங்குஷ்டம்
 சாடும்வாதந் தனிப்பித்தம் நீங்குமே. (௩௱௨)

நீங்குங்காந்தல் கொடிய பெருநோயும்
 தீங்குசெய்யுந் திமிர்வாத ரோகமும்
ஆங்குகாச மறையுஞ் சுவாசமும்
 தேங்குகிரந்தி தெறித்தோடிப் போகுமே. (௩௱௩)

போகும்வெட்டுப் புகலும் படலமும்
 ஏகுஞ்சூலை யெழிலான மேகமும்
சாகுமாந்தமுஞ் சாற்றும் பெரும்பாடு
 வேகுமழலை விசையாய்ப் பறக்குமே. (௩௱௪)

பறக்குஞ்சன்னி பகரப் பதின்மூன்றும்
 திறக்கசேத்துமந் தோன்றத் தொண்ணூற்றாறும்
வறக்கமேசுரம் வாகா யறுபதம்
 துறக்குபிரமியந் தோன்று நீரிழிவே. (௩௱௫)

தோன்றுவாதந் துடியாங் கழல்வாதம்
 சான்றமேனியிற் சாற்றும் படைசொறி
நேன்றபீனிசம் நிகழும் நேத்திரவாய்வு
 ஊன்றபல்நோ யுரையு மறையாப்பே. (௩௱௬)

ஆப்புடன் யுரையரையுங் கண்டமாலை
 மூப்புநோயு முறையு முசல்வலி

சேப்புகண்டன் சிறக்குகமர்க் கண்டன்
வாய்ப்புண்ணுற்றவம் முறைந்தோடிப் போகுமே. (கயஎ)

போகும் நாலாயிரத்துச் சில்வாணமும்
ஆகுந்தயில மறைந்தேன் பெரும்பாகம்
சாகுமாந்தர் சடுதியில் மாண்டிடார்
வாகுதன்வந்திரி வகுத்தது வுண்மையே. (கக அ)

புஷ்பபாணத்தயிலம்.

உண்மைகேளு முரைக்கிறேன் மாந்தர்க்கு
தண்மையான தனிப்புஷ்ப பாணமாம்
கண்மையாமல்லி கழறு மூசிமல்லி
வண்மையாக வரையு மகிழமே. (ககக)

மகிழுமன்னுசி மணக்கும் பனனீர்ப்பூவாம்
நெகிழுங்கஸ்தூரி சேர்ந்த வாற்றலரி
தகிழுமுல்லையும் சாற்றும் பெருந்துரா
புகழும் தாமரைபுஷ்பம் அல்லியெடே. (கஉ௦)

எடுத்துச் தசங்கழு நீருடனும்பலும்
தொடுத்தபூவாஞ் சிறந்த செம்முருக்கன்
அடுத்த முருங்கையான வகத்தியும்
நடித்தபாதிரி நவிலும் பத்திராட்சியே. (கஉக)

பத்திராட்சி பகருங் கோங்கிலவன்
சத்திமேவுந் தனிசசெம் பருத்தியாம்
வெத்திகொள்ள விரும்பு மனோரஞ்சிதந்
தூத்திப்பூவுடன் மூன்றும் தணப்பூவே. (கஉஉ)

பூவுடன் கலியாணங் காட்டாத்திப்பூ
நாவுதப்பாமல் நவிலச் சமனதாய்
ஏவும்பாண்ட மெழிலாய்ப் பொதிந்துமே
பாவுகியாழும் பதமாகச் செய்திடே. (கஉங)

செய்யுங்கியாழஞ் சிறக்க வொருநாழி
பெய்யுமெள்ளெண்ணெய் பேசு மிருநாழி
துய்யுமே பசும்பாலு மரைநாழி
நையுமொன்றாக நவிலவே காச்சிடே. (கஉச)

காச்சியே பதங் கமுறவடித்திடு
பேச்சுதப்பாமல் பிரியமாய் முழுகிடு
போச்சுமேகம் புகலும் பிரமேகம்
நீச்சுதிரேகம் நெகிழ மணக்குமே. (௩௨ரு)

மணக்கும் பித்தமும் வாய்நீருரலறுங்
தணிக்குமே தழல்தரியாப் பிணியலும்
கணிக்கும்வியாதி கமுறும லோடிடும்
செணிக்குந்தயிலந் திறமாகப் பார்த்திடே. (௩௨சு)

மகிழம்பட்டைத்தயிலம்.

பார்த்துமாந்தர் பகரு மொருபாகம்
ஆர்த்தும்பட்டை யறையு மகிழமாம்
கோர்த்துவேர்ப்பட்டை குறிக்குந் தசபலம்
சேர்த்துக் கருஞ்சீரஞ் சிறக்கப்பலமெடே. (௩௨எ)

எடுத்துமாந்தர்க் கெழிலாந் தயிலமோன்
றடுத்திடாமலே தாக்கு மகிழமாம்
தொடுத்தபட்டையாந் தோன்றுந் தசபலம்
விடுத்தகியாழமும் வேண்டியே செய்திடே. (௩௨அ)

செய்துகியாழஞ் சிறக்கவே யெட்டிலொன்
றெய்துமே பசும்பாலு மிளநீரும்
கொய்திடாமற் குறிக்குமா மவ்விடை
பெய்துமெள்ளெண்ணெய் பேசச் சமன்தூக்கே. (௩௨௯)

தூக்கிப்பாண்டத்திற் றுவளவே காச்சிடு
தாக்குமே பதந்தனிய விறக்கிடு
நோக்கும்பாளி னுவல்பதம் போற்றியே
போக்கில்லாமற் பொருந்தத் தானஞ்செய்யே. (௩௩௰)

செய்யும்போது சிறந்ததோர் பித்தமும்
நையும்வாத கவிலு மயக்கமும்
பெய்யும்வாய் நீர்பிதற்றல் மதமூர்ச்சை
தொய்யுமீளே துவண்டோடிப் போகுமே. (௩௩௧)

அகிற்கட்டைத்தயிலம்.

போகுமாந்தர் புகலும் பிணியற
ஆகுங்கட்டை யறையு மகிற்கட்டை

வேகுமேபதம் வெய்யவே நூறதாம்
 தேகுமே சலக்திறமாய்ப் பனிரண்டே. (கக௨)

பன்னிரண்டுடன் பகருஞ் செங்கரும்பு
 வன்னிபாண்டத்தில் வாகாகப் பூட்டியே
சொன்னகியாழங் திறமாக வெட்டிலொன்
 றெண்ணியே பசும்பாலு மிளநீரே. (ககக)

பாலுடன்கியாழம் பகருஞ் சமனதாம்
 சாலுடனெண்ணிச் சாற்றிடு மவ்விடை
மேலுக்தயிலம் விளம்பவே காச்கிடு
 நாலுசாமம் நவில விறக்கிடே. (ககச)

இறக்கித் தாயாரெழில் பதம்போற்றியே
 திறக்கமண்டலஞ் சிறப்பாய் முழுகிடில்
உறக்கமுள்ள வுயர்பத்து சன்னியும்
 சிறக்கும்பினிசஞ் சிதைக்தோடிப் போகுமே. (ககரு)

போகும்பித்தம் புகலுங் கரும்பித்தம்
 ஏகும்வாத மெழிலாஞ் சிலேத்துமம்
நோகுமாங்தை நுவலு மிருமலும்
 போகுமென்று புகன்றனர் முனிவரே. (ககசு)

காஞ்சுரூத்தயிலம்.

முனிவர்வாக்கு முறைகளிற் பொய்யாது
 கனிவுடன் றயிலமு முரைக்கிறேன்
பனியுமூலி புகருகாஞ் சுரூவாம்
 வனிதமாக வறையு மொருநாழி. (ககஎ)

நாழிமூலி நவிலப் பிழிந்துமே
 கோழியாவாரை குறிக்குஞ் சமனெடை
பாழிலாத பகரு மிளநீரும்
 நாழியேபசும் பாலுங் கொடுத்திடே. (ககஅ)

கொடுத்துவொன்றாய்க் முழுறக் கலக்கியே
 தொடுத்துமெள்ளெண்ணெய் தோன்ற வவ்விடை
அடுத்துப்பாண்ட மறையவே காச்சிடு
 வெடுத்துமேபதம் வாகாய் வடித்திடே. (ககசு)

வடித்துமாயன் மலரடி போற்றி
 தொடுத்துமண்டலங் தோன்ற முழுகிடில்
அடுத்தகாச மறையும் ரத்தபித்தம்
 சடுத்தமந்தார காசமு மேகுமே. (௩௪௰)

ஏகுபாண்டு மெழிலா மலசன்னி
 நீகுஞ்சூலை நெகிழுங் கபரோகம்
சோகைபாண்டு சொறிசிரங் கேகிடும்
 வாகுதன்வந்திரி வகுத்தது வுண்மையே. (௩௪௧)

நிலக்கடம்புத்தயிலம்.

உண்மையாக வுரைக்குந் தயிலமொன்
 றண்மையாகவே சாற்றுவேன் மாந்தர்க்கு
வெண்மையான விரும்பும் நிலக்கடம்
 பண்மையாம் பகரத் தசமெடே. (௩௪௨)

எடுத்துப்பாண்ட மெழிலாய்க் கியாழஞ்செய்
 அடுத்தவாமணக் கெண்ணை தசபலம்
தொடுத்தமெள்ளெண்ணை தோன்றவே யவ்விடை
 கொடுத்துத்தயிலங் கூறவே காச்சிடே. (௩௪௩)

காச்சுமேபதங் கழற வடித்திடு
 பேச்சுதப்பாமல் பிசகற மண்டலம்
முச்சிடாமல் முசிய முழுகிடில்
 போச்சுகுஷ்டமும் புகலப் பறக்குமே. (௩௪௪)

பறக்குந்திமிர்நோய் பகருங் கழல்வாதம்
 சிறக்குமாந்தர் சிறந்த நீராம்பலும்
திறக்குபீனிசந் தேர்ந்தநீர்ப் பாய்ச்சலும்
 துறக்கக்கானகம் துவண்டோடி நீங்குமே. (௩௪௫)

நுணுப்பட்டைத்தயிலம்.

நீங்குமாந்தர் நிறையத் தயிலமொன்
 றோங்குபட்டை யரிய நுணுப்பட்டை
பாங்குடன் பலம்பகரு மிருபதாம்
 வாங்குதண்ணீர் வறை தூணி சேர்த்திடே. (௩௪௬)

சேர்த்துக் கியாழஞ் சிறக்க விளநீரும்
 பார்த்துநிம்பத்தின் பழச்சாறு மவ்விடை

ஆர்த்துமெள்ளெண்ணை யறையச் சமனெடை
வார்த்துமெழுகு பதத்தி லெடுத்திடே. (கசஎ)

எடுத்துத்தயில மெழிலா யிரக்கியே
அடுத்துமண்டல மண்பாய் முழுகிடில்
தொடுத்தகாச்சல் தொடரு முறைக்காச்சல்
படுத்தவியாதி பகர்குன்மம் போகுமே. (கசஅ)

போகுமேரணம் புகலு மரையாப்பு
ஆகுங்கிரந்தி யரிய பெருஞ்சிரம்
காகும்வியாதி கழறப் பறந்திடு
மேகுதன்வந்திரி விரும்பி யுரைத்ததே. (கசகூ)

உரைத்தாரிம்முறை யுலகத்தில் மாந்தர்க்கு
நிரைத்தார்தயிலம் நிறையச் சரிபாகம்
திரைத்தநூலிது தேறவே மாந்தர்க்கு
குரைத்த தைஞ்ஞூறுங் கூறியதுண்மையே. (கருவ)

மனோரஞ்சிதபாணத்தயிலம்.

உண்மையாக வுரைக்கிறேன் மாந்தர்க்கு
தண்மையா மனோரஞ்சித பாணமாம்
திண்மையாகத் திறமா யொருசேரு
வெண்மையாய்ச்சலம் விரும்பிடக் காச்சிடே. (கருக)

காச்சுராஜானிப் பழஞ் சமனெடை
பேச்சுதப்பாமல் பிசகாப் பசும்பாலாம்
ஆச்சுமெள்ளெண்ணெ யறையு மவ்விடையாம்
மூச்சுதப்பாமல் முதிரவே காச்சிடே. (கருஉ)

காச்சுமண்டலங் கருதி முழுகிடில்
போச்சுவியாதி புகலும் பிரமியம்
நீச்சுநாற்றம் நெருங்குங் கபமீளை
வீச்சுகுரைநோய் மிகவாப் பறக்குமே. (கருங)

பறக்கக்கூந்தல் பதமாய் வளர்ந்திடு
சிறக்கவெண்மயிர் சேரக் கறுத்திடும்
திறக்கத்திரேகந் தெளிந்த மணப்பாகும்
பறக்கப்பல்நோய் பறந்தோடிப்போகுமே. (கருச)

போகுமிரைப்புடன் பொல்லா விருமலும்
ஏகுங்காந்த லெழிலான பித்தமும்
ஆகும்வாத மறையுங் கபரோகம்
வாகுசேத்துமம் வாகாக நீங்குமே. (௧௫௫)

நீங்குமேகம் நெருங்கும் வாய்நாற்றம்
ஓங்குங்கிராந்தி யுயர்ந்த பெருநாற்றம்
தீங்குசெய்யுஞ் சிலேப்புடை புற்றுவும்
வாங்கிப்போமென வகுத்தார் தன்வந்திரி. (௧௫௬)

பரிமளகெந்தித்தயிலம்.

வகுத்தார்மாந்தர் வறையுந் தன்வந்திரி
தொகுத்தார் பூஷணந்தோன்றும் பரிமளம்
நிகுத்தார் குருவிவேர் நேருமருக்கொழுந்
தகுத்தாமிருவேலி தாமிலா மிச்சியே. (௧௫௭)

மிச்சிகிச்சிலி விரும்புந் தசபலம்
கொச்சிப்பன்னீர் குறிக்கு மிருநாழி
அச்சமில்லா தறையும் நல்லெண்ணெயாம்
உச்சிதமா யுறுதியாய்க் காச்சிடே. (௧௫௮)

காச்சுதயிலங் கருதப் பதனஞ்செய்
மூச்சிடாமல் முசியவோர் மண்டலம்
தேசகுவார மிருமுறை முழுகிடில்
போச்சுகண்ணேய் புகலப் பறக்குமே. (௧௫௯)

பறக்கும்வியாதி பரிமள கெந்தியால்
திறக்குங்கூந்தல் திறமாய் வளர்ந்திடும்
உறக்கும்பித்த முழங்கு மதமூர்ச்சை
சிறக்கும்வாயூறல் சிதறியே யோடுமே. (௧௬௰)

ஓடுமேகம் பிரலாட சன்னியும்
நீடுமேதழல் வாரி யலறிடும்
கூடுமே கபமீளெ யொதுங்கிடும்
சாடுநேத்திர வாயு வகலுமே. (௧௬௧)

அகலுங்கண்ணோ யறையுந் தொண்ணூற்றுமும்
நிகலும்பீனிசம் நேருநீர்ப் பாய்ச்சலும்

புகலுங்காக்கை பிறவலி சன்னியும்
சகலநோய்களுந் தாண்டு மடலிதே. (கசுஉ)

சுகந்தவாரித்தயிலம்.

அடவாய்மாந்தர்க் கறையுஞ் சுகந்தமாம்
சடமாங்கற்றாழை சாற்றுந் தண்ணீர்மிட்டான்
திடமாமன்னுசி சேர்ந்த பழரசம்
வடமாங்கிச்சிலிப் பழமும் ரசங்கூட்டே. (கசுங)

கூட்டியொன்றாய்க் குலாவச் சமனெடை
நீட்டுமெள்ளெண்ணெய் நெகிழவே யவ்விடை
பூட்டியொன்றாய்ப் புகழ் மெழுகுபதம்
மூட்டிப்பாண்ட முசியவே காச்சிடே. (கசுச)

பாண்டம்விட்டுப் பதமாய் வடித்திடு
ஆண்டுகால மறையவே மூழ்கிடில்
மூண்டபித்த முதிரவே நாற்பதும்
நீண்டவாதம் நெகிழப் பறக்குமே. (ருசுரு)

பறக்கும்வியாதி பகரும் பெருநோயும்
திறக்கமானதோர் தேர்ந்த கபாலநோய்
இறக்கநீரிழிவு ரத்த மூத்திரம்
பறக்குமென்றல்லோ பாடினர் சித்தரே. (ருசுசா)

மன்மதலீலைத்தயிலம்.

சித்தர்வாக்கு திசையிலும் பொய்யாது
சித்தர்மாந்தர்க்குத் திறந்திட்டா ரிம்மூன்றும்
சித்தர்நூல்களிற் றெளிந்திட்டா ரென்னாலும்
சித்தரின்னூலிற் றெளியவே செப்பினர். (கசுஎ)

செப்புமன்மத லீலை தயிலமாம்
ஒப்புங்கிராம்புட னேங்குங் கருவாவாம்
தப்பிலாத தனிப்பெருஞ் சாதிக்காய்
கப்பும்வெள்ளரி கருது முருங்கையே. (கசுஅ)

முருங்கையேல முகிழ்மருக் காரையாம்
கருங்கையான்மூலிக் கழறுஞ் சதகுப்பை
பெருகைமூலியும் பேசும் பிரண்டையாம்
தருங்கைமதுரந் தான்றி சமன்கூட்டே. (கசுகூ)

கூட்டிச்சாம்பிராணி குலாவுங் கஸ்தூரியாம்
நீட்டுங்குங்குமம் நேரும் பச்சைப்பூரம்
பூட்டும்பன்னீர்ப்பூ புகலும் பேதாணுவும்
காட்டுமல்லியும் கருதச் சமன்தூக்கே. (௬௭௰)

தூக்கியேசலந் தோன்றப் படியிடு
தாக்கிப்பாண்டந் தனியக் கியாழஞ்செய்
போக்கில்லாமற் புகலப் பசும்பாலும்
நோக்குமெள்ளெண்ணெய் நவலச் சரியெடே. (௬௭௧)

எடுத்துத்தயில மெழிலாகக் காச்சியே
அடுத்துமண்டல மன்பாய் முழுகிடில்
தொடுத்தலீலையிற் ரேன்றப் புணர்ச்சியாம்
கடுத்தமேகங் கழன்றோடிப் போகுமே. (௬௭௨)

போகும்பத்தியம் போற்றுங் காடைபுறு
ஆகுமுருங்கை யரிய கச்சலுடன்
பாகுங்கத்திரி பகருங் கொத்தமல்லி
வாகுவெள் ளாட்டிறைச்சியுஞ் சேர்த்திடே. (௬௭௩)

சேர்த்துமேபசும் பாலுட னெய்யாகும்
கோர்த்துமேவாதுமை குலாவு முந்திரியாம்
தீர்த்தமாகவே சேர வருந்திடு
வார்த்தைதப்பாது வரையு மாமுனியே. (௬௭௪)

சீதாதேவித்தயிலம்.

அறைந்தார் முனிவ ராயுறுவேதமாம்
சிறந்தசீதேவித் தயில முரைக்கிறேன்
கறந்தகன்னரி காட்டுக் கருஞ்சீரம்
முறந்தரம்வேலி முகிழ் நிலப்பனையே. (௬௭௫)

நிலப்பனையுட னேருந் துளசியாம்
கலப்பையெட்டியுங் கருது ரோக்ணியாம்
பலப்பமாஞ்சில் பகருங் கிலுப்பையாம்
சுலப்பமாகவே தோன்றச் சமனெடே. (௬௭௬)

எடுத்துக்கியாழ மெழிலாகக் காய்ச்சியே
தொடுத்தவெள்ளெண்ணெய் அகளக் கலக்கியே

அடுத்துபாண்ட மடுப்பினி லேற்றியே
சடுத்தமாகத் தனிப்பதங் காச்சிடே. (கஎஎ)

காய்ச்சுமேதயில முழு மண்டலம்
மூய்ச்சிடாமல் முழுகியே வந்திடில்
நோய்ச்சிப்போகும் நவலும் வியாதிகள்
கூச்சிடாமல் குமிப்பா யுரைத்ததே. (கஎஅ)

உரைக்கும்வியாதி யுறங்கும் வழிகேளு
திரைக்கும்பித்தம் தெளிந்து மயங்கிடும்
வரைக்கும்ரோகம் வகைகெட்டு ஓடிடும்
பறைக்குந்தன்வந்திரி பாடின துண்மையே. (கஎகூ)

கோரைக்கிழங்குதயிலம்.

உண்மையாக வுரைக்குந் தயிலமொன்
றின்மையான திரையு முத்தக்காசு
வண்மையாக வகுக்கும் நாறுபலம்
பண்மையர்கவே பாங்காகத் தூக்கிடே. (கஅம)

தூக்குங்கிச்சிலி துய்ய தசபலம்
தாக்கும்வேலி தனிய வறுபலம்
நோக்கும்பத்திரி கொருங்கத் தசபலம்
தேக்குதாளிசந் தெளிவா யெடுத்திடே. (கஅக)

எடுத்துச்சீரகம் எழிலாய்த் திரிபலம்
அடுத்துக்கியாழம் அன்பாகச் செய்திடு
தொடுத்துப்பாண்டங் துகள வடித்திடு
கொடுத்துஎள்ளெண்ணெய் குமுற வடித்திடே. (கஅஉ)

வடித்துமண்டலம் வாதாய் முழுகிடில்
பிடித்தரோகமும் போகு மயக்கமும்
நடிராத்தபித்தம் நவிலுங் கயரோகம்
வெடித்தசூலையும் விரைந்தோடிப் போகுமே. (கஅங)

மகாகீழாநெல்லித்தயிலம்.

போகும்நெல்லி புகலும் மகாநெல்லி
ஆகுந்தயிலம் அறையுங் கீழாநெல்லி

பாகுதூக்கிப் பகர்ந்திடு காலவாய்
ஏகும்வில்குத் மெழில்பதஞ் சேர்த்திடே. (௩அச)

சேர்த்துவேலி சிறக்க வொருபலம்
கோர்ச்துச்சீரகங் கூறு மிரண்டரை
பார்த்துமுந்திரி பகரு மொருபலம்
தீர்த்துச்சந்தனத் தூள்பலந் தூக்கிடே. (௩அரு)

தூக்கிடுஞ்சலந் துய்ய படியெட்டாந்
தாக்கிப்பாண்டந் தனிலடுப் பேற்றிடு
போக்கில்லாமற் புகல வெட்டிலொன்றாய்
வாக்குத்தப்பாமல் வாகா யிறக்கிடே. (௩அசு)

இறக்கிக்கியாழ மெழிலெனு மெண்ணெயும்
திறக்கச்சமனெடை சீராய்க் கலந்துமே
யிறக்குமேபதம் பேணிக் கடுகதாய்
இறக்கித்தயில மெழில்பதம் போற்றிடே. (௩அஎ)

போற்றுங்கிச்கிலிப் புகலுங்கிழங்குடன்
ஏற்றும்பச்சிலை தூளதைத் தூவி
யொற்றுமே வடித்தே வடிகொண்டபின்
போற்றுமாயன் புகலப் பதம்பணிந்திடே. (௩அஅ)

பணிந்துமண்டலம் பகர வொருமுறை
துணிந்துமுழுகிடத் துய்ய வினையறும்
கணிந்தபித்தங் கபாலச் சூடுமுதல்
கனிந்தவாரேம் வரையும் வினைபோமே. (௩அகூ)

போகும்வியாதி புகலுங் காமாலையாம்
ஏகும்சூலை யெழில்கண் புகைச்சலும்
வேகுமேகம் விருதாப் பியமறும்
ஆகுந்தயில வறைவது உண்மையே. (௩கூ0)

மகாதேவரஞ்சிதத்தயிலம்.

உண்மையாக வுரைக்குந் தயிலமொன்
றிண்மையா மிலவங்கப் பட்டைபலம்
வண்மையாக வகுக்கு மாலம்பட்டை
திண்மையானதோர் தில்லைப் பட்டையெடே. (௩கூக)

எடுத்துமேசிவன் வேம்பின் பட்டைபலம்
தொடுத்துமேயகிற் பட்டை யறுபலம்
கொடுத்துமேபழச் சாற்று விடித்திடு
அடுத்துமே மலகச்சா விடித்திடே. (௧௬௨)

இடித்துச்சாறு யெடுப்பாய் தசபலம்
கொடுத்துமேபசும் பாலிற் சமனெடு
வடித்துஎள்ளெண்ணெய் வாகாய்ச் சமனென்டை
கொடுத்துப்பாண்டத்திற் குமுறக் கலக்கிடே. (௧௬௩)

கலக்கித்தீபம் கமுறவே காச்சிடு
நலக்கிடாமல் நவிலுந் தயிலத்தை
பிலக்கமண்டலம் பேச முழுகிடில்
துலக்கவியாதிபோம் துய்ய வினைகளே. (௧௬௪)

துய்யபித்தம் துடிபெறு வாதமும்
நையரோகம் நவிலுங் குன்மரோகம்
பெய்யசூலை பெரும்பாடு ரத்தமும்
செய்யநோய்கள்போம் தன்வந்திரி யுரைத்ததே. (௧௬௫)

உரைத்தவாக்கு நிசைநிலம் பொய்யாது
கரைக்கனாவு கிடையாது மானிலம்
விரைக்கவாகடம் விரும்பி யுரைக்கிறேன்
தரைக்கவாலுழுவைப் பலம் பத்தெடே. (௧௬௬)

வாலுழுவைத் தயிலம்.

எடுத்தவாலுழுவைப் பழம் பத்துடன்
தொடுத்த சோம்புடன் துய்யமுத்தக்காசு
அடுத்த பேராமுட்டிப் பலமவ்விடை
கொடுத்துமே பசும்பாலி லரைத்திடே. (௧௬௭)

அரைத்து எள்ளெண்ணெ யாவின்படியரை
கரைத்துமே யிளநீரிற் கலக்கியே
நிரைத்துப்பாண்டந் திறமாகக் காய்ச்சியே
முறைதப்பாமல் முதிர யிரக்கிடே. (௧௬௮)

இறக்கிமண்டல மியல்பாய் முழுகிடில்
சிறக்கும்பித்தஞ் சிரநோ யனந்தமும்

பறக்கும்வாதம் பகரு மகாரோகம்
நிறக்குமேகப் படைகளு நீங்குமே. (௩௬௬)

நீங்குகுட்டம் நிலைக்குங் கடிரணம்
தீங்குசெய்யும் திமிர்ப்படை தானறும்
ஓங்குநோய்க ளுறைந்திடு கானகம்
பாங்கு தன்வந்திரி பாட்டுபொய்யாதிதே (௬எ)

பொய்யாதையா புகலுங் குருமொழி
ஐயாதன்வந்திரி யன்பா யுரைக்கிறேன்
பையமானிடர் பாரிற் பிழைப்பதற்
கையனீசன் கழற வுரைத்ததே. (௬எக)

செங்காவற்பட்டைத் தயிலம்.

உரைக்குந்தயில முறையு முறைகமகேள்
திரைக்குஞ் செங்காவற் பட்டையறுபலம்
கரைக்குமருதம் பட்டைத் தசபலம்
முரைக்க வெண்டோன்றிப் பட்டைசமனென்டே. (௬எ௨)

எடுத்துப் பஞ்சாங்கப் பட்டைதசபலம்
கொடுத்துமே பழற்சாற்று விடித்துமே
கொடுத்துமே பதக்குச் சாறெடுத்திடு
அடித்து எள்ளெண்ணெ யன்பாய்ச்சமன்கூட்டே. (௬எ௩)

கூட்டியாவின்பால் கூறச் சமனெடை
நீட்டிப்பாண்ட நெருங்கிப் பொதிந்துமே
தீட்டியே பதமாகவே காய்ச்சிடு
வாட்டியீசன் மலர்ப்பதம் போற்றிடே. (௬எ௪)

போற்றிமண்டலம் புகழாய் முழுகிடில்
தூற்றும்பெண்டிர் துடியாப் பெறும்பாண்டு
கூற்றும்பித்தம் குதிக்கும் பெரும்வாதம்
தோற்றும் பார்வைநீர் துலைந்தோடிப்போகுமே. (௬எ௫)

போகுங்குட்டம் பொருும விளைப்புடன்
ஏகும்வாந்தி யெழில்பெரு காசமும்

வேகுமேகம் விஷநீர் பறந்தோடும்
சாகும்வியாதி தளர்ந்தோடி நீங்குமே. (சாசு)

நீங்குங்காந்தல் நிகலுக் கைவீச்சுடன்
தீங்குசெய்கின்ற தீராப் பிணிகளும்
பாங்குமூலம் பகரு முளைமூலம்
ஏங்கிக்காணக மொழிலாய்ப் பறக்குமே. (சாஎ)

உடல்தளர்ச்சிதீர சர்வாங்க ராஜயோகத்தயிலம்.

பறக்கும்பாரில் பகர்ந்திடு மாந்தர்க்கு
சிறக்கும் ராசாங்கத் தயிலமுறைக்கிறேன்
சிறக்கச்சந்தனந் தேர்ந்த வகிற்கட்டை
நிறக்கப் பூலாநெருங்கப் பலந்தூக்கே. (சாஅ)

தூக்கிப்பூலாவுந் துய்ய செஞ்சந்தனம்
தாக்குக்காசுடன் தக்க விலாமிச்சு
தேக்குப்பத்திரி தேர்ந்த பஞ்சாங்கமும்
போக்கில்லாமற் பொருந்தப் பலங்கூட்டே. (சாகூ)

கூட்டிநன்னாரி கூறிட வவ்விடை
நீட்டிவாலுழுவை யரிசிபலம் நேராய்
கோர்த்துக் கிச்சிலி கூறிடுமவ்விடை
ஆர்த்துமஞ்ச ளறையுந் திரிசாதம். (சாய)

சாதம்வால்மிளகு வகையோர் பலம்
நீதமாக நெருங்குஞ் சதாபல்லி
வாதமான வதுக்கும் பற்பாடகம்
பேதஞ்சொன்ன விதிப்படிப் பார்த்திடே. (சயக)

பார்த்துச் சாதுரியம் பலமவ்விடை
நேர்த்தியாக நெருங்கும் நந்திவர்க்கம்
பூர்த்தியாகப் புகலப் படிச்சாற்றால்
தீர்த்துமே யரைதீரச் சமனெடே. (சயஉ)

எடுத்துயெள்ளெண்ணெ யெழிலாய்ச் சமனெடை
தொடுத்துப் பாண்டத்துட் டோன்றவேகாச்சிடு

அடுத்துமண்டல மன்பாய் முழுகிடில்
சடுத்தமான சகலநோய் தீருமே. (சமி௩)

தீரும்ரோகம் திரையும் நேத்திரரோகங்
கூறுஞ்சன்னி குலாவு முத்ராங்கமும்
மீறும்பித்த மிசைந்த பிடரிநோய்
தூறும்கண்ணுளை தூலங் கவறுமே. (சமி௪)

அறுகுங்காச மறையுஞ் சயகாசம்
குறுகுங்கைகால் குறைநோய் குஷ்டங்களும்
மறுகுந்தேமல் மறையு மித்தயிலத்தால்
சறுகுமேகப் பிணிகளுந் தாழுமே. (சமிரு)

கபாலப்புற்றுபீநசம் காதிற்சீழ் தீர்வதற்கு
மகாபூர்வக்கியான தயிலம்.

தாழுமாந்தர்க்குத் தயில முறைக்கிறேன்
ஆழும் பூர்வக்கியான முறைமைகேள்
சூழுங்கோசலந் துய்ய வொருபடி
நீழுமே பசும்பாலும் படிசேரே. (சமி௬)

சேரும்வெள்ளாட்டி னீர்படி மூத்திரம்
கூருமப்பாலுங் கூறப் படியெடு
சீரகம் பழச்சார் படிதானெடு
வாறுமேமணித் தக்காளி யூத்திடே. (சமி௭)

ஊத்தும்பூனை வணங்கி யொருபடி
சேர்த்துமுக்கண்ணின் பாலுஞ் சமனிடை
பேத்துயெள்ளெண்ணெய் பேச வொருபடி
மாத்துமாமணக் கெண்ணெய் சமன்கூட்டே. (சமி௮)

கூட்டமொவினெய் கூறிட வவ்விடை
நீட்டும்பாண்டம் நெருக்கக் கலந்துமே
ஊட்டியேசம லாக்கினி யாகவே
காட்டியேமெழுகு பதங் காய்ச்சிடே. (சமி௯)

காச்சிமண்டலங் களிப்பாய் முழுகிடில்
மூச்சிடாமல் முயன்றோடும் வியாதிகள்

பேச்சில்லாமல் பெருமூச் செறிவதும்
மாச்சிடும்பிணி மறைந்திடும் பித்தமே. (சஉ௰)

பித்தம்நீங்கும் பெருவயிர் நீங்கிடும்
நித்தமோர்முறை நாள்விட்டு மூழ்கிடில்
சத்திவாதமுஞ் சதுர்வாய்ப் பொருமலும்
வற்றிநீர்முதல் வரைந்து திகைக்குமே. (சஉக)

திகைக்குன்குன்மம் திசைவாயு வெண்பதும்
பகைக்குஞ்சூரியன் பனிபோற் பதுங்கிடும்
நகைக்குமாந்தர் நவிலும் பிணியறும்
வகைக்குத் தன்வந்திரி வாகாயுரைத்ததே. (சஉஉ)

உரைத்தாரிந்நூலுக் குற்ற பெருநூலென்
றிரைத்தேன்சாவிய மாயிரத் தைந்நூறும்
திரைத்தமானதோ ராயுறு வேதமாம்
வரைத்ததன்வந்திரி வாக்கு மெய்யாகுமே. (சஉங)

மகாமேருகற்பகதருதயிலம்.

ஆகுங்கற்பக மறைபு மகாமேரு
வாகுநெல்லி வறைபு மகாநெல்லி
பாருமேகடுக் காயுடன் வேலியும்
சேருசெங் நாயுருவியுஞ் சேர்த்திடே. (சஉச)

சேர்த்துகையாந் தகரை கருணைவேர்
பார்த்துமேகு மட்டிக்காய்வேர் தன்னுடன்
சேர்த்துப்பஞ்சாங்க வேருஞ் சமன்கூட்டி
ஈர்த்துயிசுர மூலி யரைத்திடே. (சஉரு)

அரைத்துவாயணக் கெண்ணெயிற் பூட்டியே
கரைத்துப்பாண்டத்திற் கருதவே காச்சிடில்
முரைத்துமண்டல மூழ்கிட நோய்கள்போம்
திரைத்தநோய்களுந் தீருவ துண்மையே. (சஉசா)

உண்மைகேளு மூதிரப் பெருக்குண்டாம்
தன்மையான தயிலத்தாற் சாவில்லை

கண்மையீசன் கருதினு ரெனக்குமே
  பன்மையாகப் பகர்ந்த தயிலமே. (௪௨௭)

தயிலப்பெருமைமெய்ச் சாற்றிட லாகுமோ
  அகிலமெல்லா மறையு மகாமேரு
புயிலமாகவே பாரில் மனிதர்க்கு
  கயிலைமாமுனி கண்டு வுரைத்ததே. (௪௨௮)

உரைத்தவாக்கு வுலகினிற் பொய்யாது
  திரைத்தவேழ்கடல் திசையெட்டும் பேர்பெற்றேன்
மறைத்தபொருளெல்லா மகாமுனி யெந்தனுக்
  குரைத்ததாலேநான் கூறினே னுலகிலே. (௪௨௯)

அஷ்டமூலித்தயிலம்.

உலகில்மாந்தர்க் குபயோக மாவதற்
  குண்மேனி யெழிலான கையானும்
அகிலமூாமல் அறையும் பெருமூலி
  சகலமான தனிக்கஞ்சா சேர்த்திடே. (௪௩௰)

சேர்த்துவாமனக் குறிஞ்சான் மூலிமுதல்
  பார்த்துவாவாரை பகரும் கொத்தமல்லி
கோர்த்துமூலிகை கூறும் படியெடை
  ஆர்த்தும்பாண்ட மரையப் படியெடே. (௪௩௧)

எடுத்துஎள்ளெண்ணெ யெழிலாய்ச் சரிகூட்டி
  கொடுத்துமெழுகு தோன்றும் பதத்தினில்
விடுத்துக்காச்சி விளங்க யிறக்கியே
  தொடுத்துதிட மீசர்பதம் போற்றிடே. (௪௩௨)

போற்றுமண்டல பொருந்த முழுகிடில்
  ஆற்றும்வியாதி யறையும் வினைகள்போம்
தூற்றுமஷ்டாங்க யோகத் தயிலத்தால்
  வேற்றும்வியாதி வினைகள் பறக்குமே. (௪௩௩)

பறக்கும்பித்தம் பகரும் வாதமுதல்
  சிறக்கும்பீலிகை சேர்ந்த விருமலும்

நிறக்கும்குஷ்டம் நெருங்குஞ் சொறிமுதல்
பிறக்குமேகம் பிறமேகம் போகுமே. (சஙச)

போகும்பத்தியம் பொன்னுங் கண்ணி
யேகுமத்தி யிளம்பிஞ் சவரையாம்
ஆகுமுருங்கை யரிய யெலுமிச்சை
பாகுபச்சை பயர்முத லாகுமே. (சஙரு)

பஞ்சமூலிதயிலம்.

ஆகுமேபஞ்ச மூலித் தயிலமா
மேகும்பொன் னுவாரை மூலிதசபலம்
பாகுமேமுதியார் கூந்த லவ்விடை
தேகுநெச்செட்டித் தெளிய வறுகனும். (சஙசு)

அறுகுவல்லாரையம் மூலி யவ்விடை
பருகுமூலி பகர யிடித்துமே
சருகுஎள்ளெண்ணெய் தக்க நிறையதாய்
பெருகுவாமணக் கெண்ணெயுங் கூட்டிடே. (சஙஎ)

கூட்டியேபசும் பாலுட னவ்விடை
நீட்டுஞ்செவ்விள நீர்படி யவ்விடை
பூட்டியொன்றய்ப் புகலக் கலந்துமே
மூட்டிப்பாண்ட முதிர்பதங் காச்சிடே. (சஙஅ)

காச்சியேயீசன் கருதும் பதாம்புயம்
மூச்சிடாமல் முழுங்வோர் மண்டலம்
நோய்ச்சும்வினையது நோக்கிடா தோடிடும்
வாச்சுதன்வந்திரி வாக்கு பொய்யாதிதே. (சஙகூ)

மகாநந்திதயிலம்.

பொய்யாதையா புகலுங் குருமொழி
ஐயாநந்தி அறையுந் தயிலமாம்
செய்யநந்தியா வட்ட நெருஞ்சியாம்
பொய்யவில்வத்தின் பத்திரி வேர்கூட்டிடே. (சசம)

கூட்டியேகண்டங் கத்திரி வேருடன்
நீட்டுமேசங்கங் குப்பியின் வேருடன்
தீட்டுமேசிறு வழுதலை வேருமாம்
பூட்டுச்சார்வேளை பூக்லுங் தருதாழை. (சசக)

தாழைநொச்சியுஞ் சாற்றுங் கொடுவேலி
வாழைகண்ணுல் முருக்கன் வாழுள்ளி
பேழைபேய்ப்புடல் பேசுக் கிழாநெல்லி
மேழைநன்னரி மேவும் தசமெடே. (சசஉ)

எடுத்துமேசல மெண்ணியோ ரொன்பதாம்
அடுத்துப்பாண்ட மறையக் கியாழுஞ்செய்
தொடுத்துமேசலங் தோன்றும் படியதாய்
கொடுத்துமேபதங் கூற விறக்கிடே. (சசங)

இறக்குங்கியாழ மிதனி லொருபாகம்
துறக்குமேயாக்குப் பலமீ ரெட்டாம்
திறக்கும்பாண்டங் தெளிந்த சலமெட்டாம்
பறக்கக்காய்ச்சிப் பகரும் சலமிரண்டே. (சசச)

யிரண்டுகியாழம் நெருங்குமுன் கியாழமாய்
கண்டுநல்லெண்ணெய கருதிட மூன்றதாய்
பண்டுமேபசும் பாலது மவ்விடை
மொண்டுமுப்பாக மூன்றையுஞ் சேர்த்திடே. (சசரு)

சேர்க்கக்கலக்கிச் சிறக்கும் வகைசேரு
பார்க்குஞ்சந்தனம் பகருஞ் சடாமாஞ்சில்
ஏர்க்குந்தாளிச மெழிலான பத்திரி
பூர்க்கும்புஷ்கர மூலமுங் தூக்கிடே. (சசசு)

தூக்குமேகுட்ட கப்பாலை யவ்விடை
தாக்குவிடையமுங் தாழ்ந்தவ ரத்னதயாம்
போக்கில்லாமற் புகழுஞ் செங்கழுநீர்
தேக்குகோஷ்டங் தெளிந்த கருவேலே. (சசஎ)

வேலிபேர்க்கு விளங்கும் வாய்விளங்கங்
காலவட்டத் திருப்பியும் சுக்குமாம்

கோலமோமங் குழிக்கு மிளகுடன்
  சீலமான திரிபாவல் சேர்த்திடே. (சசஅ)

சேர்த்துமேபலம் சிறக்கவே யொன்றதாய்
  பார்த்துக்கிச்சிலி பகர்ந்திடு மரோகணி
சேர்த்துமக்கிஷ்டி சிறந்த வாயிவியம்
  ஆர்த்துச்சீரகம் அன்பான மஞ்சளே. (சசகூ)

மஞ்சளான மரமஞ்சள் தக்கோலம்
  கஞ்சமேசிறு தேக்கு செவியமாம்
தஞ்சமான லவுங்கப் பத்திரியாம்
  கொஞ்சத்திப்பிலி மூலமுங் கூட்டிடே. (சரு0)

கூட்டியேலம் குலாவும் லவுங்கமாம்
  நீட்டுமதுரம் நெருங்குங் கொத்தமல்லி
மூட்டுரேணுகம் முழிந்த சாதிக்காயாம்
  ஈட்டுநாகேச் சுரமுங் கஸ்தூரியே. (சருக)

தூரிமஞ்சள் துலங்கும் வராகன்மூன்
  முரிசூரணம் அன்பாகச் செய்துமே
வாரியேபசும் பாலி லரைத்திடு
  மேமீரிகாச்சியே மீள வடித்திடே. (சருஉ)

வடித்துஎண்ணெய் வகை கரண்டிவீதம்
  குடித்துமண்டலங் கூறிடக் காலதாய்
நடித்தமேகச் சுரங்களிருப்பதும்
  துடித்துமேயேகுந் துய்ய வினையறும். (சருங)

அறுத்திடுஞ்சுரம் அறையும் மாறல்சுரம்
  பிரிந்திடுமெட்டு நாளைக்கோர் வட்டமாம்
சரிந்திடுமொன்றை விட்டுவோர் நாட்சுரம்
  தெரிந்துமேசுரம் தீரவே யேகுமே. (சருச)

ஏங்குமேசுரம் எழிலான பட்சமாம்
  தீங்குதிங்கள் திறமா மிருதிங்கள்
பாங்குமேயாண்டு பகருமீ ராண்டுமாய்
  தேங்கியேசுரந் திரண்டோடிப் போகுமே. (சருரு)

போகும்பித்தம் பொரும விளைப்புகள்
  ஏகும்வாந்தி யெழிற்பெருங் காசமும்
வாகுமீளை வருங்கய ரோகமும்
  போகுமாந்தையும் பொல்லா விஷந்தானே. (சஙசு)

தானேசூலை தரியாரண சூலமா
  மேனேகேளு மகர பெரும்பாண்டுகள்
தேனேகுஷ்டம் பெருகுந் திசைவாய்வு
  ஊனேகொல்லு முரையும் விஷம்போமே. (சஙஎ)

போமேயண்டம் பொரும விடிவாய்வு
  நாமேசொன்னோம் நயன ரோகமுதல்
தாமேகொள்ளுந் தனிச் சயரோகமும்
  ஆமேகெண்டை யறையுங் கிரந்தியே. (சஙஅ)

கிரந்திமேகங் கிளர்க்குஞ் சடலத்தில்
  நிரந்தியான நெரிய பெருங்கெண்டை
வரந்தியான வருக்கும் வாதசூலை
  பரந்தியான பருக்குங் குதிக்காலே. (சஙகூ)

காலேவீச்சு கழறும் பிறவீச்சு
  மேலேமூச்சு மெலியும் ஷடகுன்மத்
தாலேவந்த தனிப்பெரும் ரோகமும்
  மூலரோக முளையுந் தொலையுமே. (சசுய)

தலையுமஷ்டாங்க யோக சன்னிமுதல்
  நிலையுஞ்சேத்துமம் நேர்ந்த தொண்ணூற்றுமு
கலையும்பீனசங் கண்ணில் கீராஞ்சனம்
  புலையும்புத்து பொரும விரைப்பதே. (சசுக)

இறப்புவாந்தி யெழிலான பாண்டுவும்
  திறக்குங்காமாலை தேர்ந்ததோர் வெள்ளையும்
பறக்குமேவிஷம் பகரு மெலிவிஷம்
  தீர்க்குமெண்ணெயால் தெளியவே நீங்கும். (சசுஉ)

நீங்கும்யோனி நெருங்கு மிடிசூலை
  தீங்குசெய்யுந் தெலியாப் பிணிகளும்

பாங்குநாலா யிரத்துச் சில்வாணமும்
தேங்குகானகந் திறந்தோடிப் போகுமே. (௪௬௩)

போகும்நந்தி புகலு மீசர்பதம்
ஏகும்பாத பெழில்பதம் போற்றியே
பாகுதன்வந்திரி பாடு முறைபெற்றேன்
ஆகுமீச ரருளினர் பாருமே. (௪௬௪)

அருளினரின்னு லாயுரு வேதமாம்
தெருளினேனிது தேருமைந் நூறதாம்
குருவின்வாய்முறை குவலயந் தன்னிலே
மருவில்லாமலே மாந்தர்க் குரைத்ததே. (௪௬௫)

சன்னிபதின்மூன்றுக்குந்தயிலம்.

உரைக்குஞ்சன்னி பதின்மூன்றுந் நானறும்
திரைக்கும்வெள்ளுள்ளி தேர்ந்த தயிலமாம்
குரைக்கவெலுள்ளின் கூருமுழக் கதாம்
நிறைக்கும்வேலி நெருங்கும் பச்சையதே. (௪௬௬)

பச்சைவேர்பட்டை பகர்ந்த தசதயிலமாம்
இச்சையாக வெழில்பெறத் தானரை
பச்சையாம்பசு வெண்ணெய் சமன்கூட்டி
யிச்சையாங்கலே யத்தினி லப்பிடே. (௪௬௭)

அப்பியேரவி தன்னிலே வைத்திடு
செப்பிடுந் தயிலமு மிறங்கிடும்
ஏப்பிடுந்தயி லத்தின் சமனுக
வெப்பியானக் கெண்ணெய் சமன்சேரே. (௪௬௮)

சேர்த்துமே யெருக்கம் பாலுழக்கதாய்
பார்த்துவேப்பெண்ணெய் பகர்ந்திடு மவ்விடை
கோர்த்துநொச்சிக் குலாவு முழக்கதாய்
தீர்த்துமேபெருங் கற்க வகைகேளே. (௪௬௯)

கேளும்புங்கு கிளர்ந்த பெருங்கிழங்
காளுமேபெருங் காயங் கடுகுடன்

நீடுமிஞ்சி நெருங்கு முருங்கைவேர்
ஆடும்பட்டை யறையப் பழமொன்றே. (சஎ௰)

ஒன்றுய்ச்சூரண மோங்கப் பொடித்துமே
நன்றுயெண்ணெய் நயிலக் கலக்கியே
குன்றுமற்பதங் கூற வடித்துமே
வன்றுமீசன் மலர்ப்பதம் போற்றிடே. (சஎக)

போற்றிமண்டலம் புகலவே காலதாம்
ஆற்றிக்காலையி லறியக் கரண்டியில்
மாற்றும்வியாதி மடியவே யேங்கிடும்
தூற்றுமேபிணி தோன்றப் பறக்குமே. (சஎஉ)

பறக்கும்வியாதி பகருங் கிரந்தியாம்
நிறக்கும்சிலவிஷம் கேருந் தசமேகமும்
பிறக்குமேகம் பிறவிச்சு ரோகமும்
உறக்கும்ருத்ராங்க சன்னியுந் தாழுமே. (சஎங)

தாழுமேபிடரி சன்னி தளமுதல்
வீழுமேசன்னி விளங்குஞ் சூரியவாதம்
நீளுஞ்சந்தில் நெருங்கு மகாவாதம்
கேளுமடவியின் கிளர்ந்தோடிப் புக்குமே. (சஎச)

நேத்திரவாய்வுமண்டையிடிக்குத்தயிலம்.

புக்குமே தயிலங்க ளுரைக்கிறேன்
உக்குங்கையாந் தகரை பொன்னுங்காணி
கைக்குமே காத்தொட்டி யிலையுடன்
பொக்கற்பூற வெற்றிலை சேர்த்திடே. (சஎரு)

சேர்த்துமேமூலிச் சாறு வுழக்கதாம்
பார்த்துமெள்ளெண்ணெய் பகரு மரையதாம்
கோர்த்துமாவினெய் கூறிட மவ்விடை
தீர்த்துமேபசும் பாலுஞ் சமன்தாக்கே. (சஎசூ)

தூக்கிப்பாண்டத்திற் றுய்யவே யிறுத்திடு
தாக்கியேகற்கஞ் சாற்ற வகைகேளு

போக்கில்லாத புகலு மிளகுடன்
வாக்குதப்பாமல் கஸ்தூரி கூட்டிடே. (சஎஎ)

கூட்டிமஞ்சள் குலாவுங் கருஞ்சீரம்
நீட்டுமேலம் நெருங்கு நற்சீரகம்
பூட்டும்வெலுள்ளி புகலுங் கஸ்தூரியாம்
காட்டுசந்தனங் கருதுங் கிராம்பெடே. (சஎஅ)

எடுத்திடும் வாய்விளங்கம் வகையெடை
தொடுத்திடும் நாலுதோன்றும் வாரகனும்
அரைத்துமுன்சாற்றி லறியப் பதமாய்
திரைத்துமே பதம்தீரவே காய்ச்சிடே. (சஎகூ)

காச்சிமண்டலங் களிப்பாய் முழுகிடில்
பேச்சுபித்தம் பெரிய மயக்கமும்
மாச்சுமேயொளி மாறு மயக்கமும்
மூச்சிடாத முயன்ற வலிபோமே. (சஅ௰)

போகுமாம்பல் பொருமலுடன் வீக்கம்
ஏகும்வாந்தி யெழிற்பெருங் கவிசையும்
நோகுந்தந்த நொறுங்குந் தசைவலி
யேகும்வாந்தி யெழிலாய்ப் பறக்குமே. (சஅக)

நேத்திராஞ்சனத் தயிலம்.

பறக்குமே நேத்திராஞ்சனத் தயிலமாம்
நிறக்குமாந்தர்க்கு நேராய்ச் சுகம்பெற
திறக்கும்சிந்தில் சிறுகீரை நிம்பமாம்
உரைக்குமே பொன்னுங்காணியுந் தூக்கிடே. (சஅஉ)

தூக்கிநாரத்த துய்யபழச் சாறும்
தாக்குமேபடி சாற்றும் நல்லெண்ணெயாம்
போக்கில்லாமற் புகலப் படிரண்டாம்
தேக்குசண்பகம் சிறந்த சிறுநாகம். (சஅங)

நாகப்பூவாம் லவுங்க மதுரமாம்
பாகமேலம் பகரும் வகைக்கது
போகமேபலம் புகலவே காலதாய்
காகவேபலங் கருத வரைத்திடே. (சஅச)

அரைத்துப்பாண்டத்தி ல்ன்பாய்க் கலக்கியே
   திரைத்துமே மெழுகுபதங் காய்ச்சியே
முறைதப்பாமல் முழுகிவர மண்டலம்
   கரைதப்பாமல் கடுகேறும் வியாதியே. (சஅரு)

ஏகும்ரோக மெழிலான கண்ரோகம்
   பாகும்நேத்திரம் பகரும் தசவாய்வு
வாகுபுல்ல மவருக்கும் புழுவெட்டு
   போகும்ஆணிப்பூ யெல்லாம் சவ்வுமே. (சஅசு)

சவ்வுமேபடலம் பில்லந் தள்ளுடன்
   எவ்வுக்கண்ணி லுறுத்து நீர்வடிதலும்
செவ்வலரிசி சிறந்தோடிப் போய்விடும்
   கவ்வுமாவுங் கருதுந் தயிலமே. (சஅஎ)

சகலபிணிதீரத்தயிலம்.

மேவுமார்தர்க் குறுதித் தயிலமுன்
   ருவும்கற்சீரம் அரிய கருஞ்சீரம்
காவுசோம்பு கருதிடு மேலமாம்
   பாவுமதுரம் பகர்ந்திடுங் கோஷ்டமே. (சஅஅ)

பகரும்நன்னாரி பருத் தண்ணீர்மிட்டான்
   நகருமிருவேலி நொருகும் தசவேலி
தகருஞ்சாரணை சாற்றும் பஞ்சாங்கமாம்
   மகரமானதோர் மதனப்பூ சேர்த்திடே. (சஅசு)

சேர்த்துப்பத்திரி சிறந்ததுய் யானுமே
   பார்த்துமேகடுக் காயுடன் தளவசம்
போர்த்துமஞ்சள் பிரிய முருங்கையாம்
   போர்த்துவம்மானுங் கூடப் பொதிந்துமே. (சகூ0)

பொதிந்துமேபசும் பாலிற் கொட்டாவியாம்
   நதிந்துமேயிள நீரிற் கலக்கிடில்
சதிந்தவெள்ளெண்ணெய் சாற்று மொருபடி
   வதிந்துமேயாவி னெய்யுஞ் சமன்கூட்டே. (சகூக)

கூட்டியொன்றாய் குழுறவே வாட்டிடு
   நாட்டிமண்டலம் நவிலு முழுகிடில்

மேக குலாந்தகன்.

ஜென்ம ஜென்மாந்தரங்களாய்த் தொடர்ந்துவரும் மேகரோக ப்பூண்டை வேரறுத்துக் கொல்வதற்கு இது ஒன்றே திவ்ய ஔஷதம். மனிதர்களுக்கு உண்டாகும் எல்லா வியாதிகளிலும் துர்த்தஸ்திரீசம்சர்க்கத்தால் உண்டாகும் மேகவியாதிகள் மாணத்தைப் போன்றவை. மேகவிரண விஷநீரானது இரத்தத்தோடு கலந்து தேகத்திலூறி, மேகச்சூலை, மேகச்சொரி, மேகச்சிரங்கு, மேகப்படை, கிரந்தி, நயனரோகம், சிரோரோகம், அஸ்திரோகம், நீரிழிவு, நீரடைப்பு, கல்லடைப்பு, நபும்ஸகம் முதலிய அனேக ரோகங்கள் உண்டாகின்றன. பின்னும் நாட்பட்டுவிட்டால் கண், காது, நாசி, நாக்கு, ஈரல், நுரையீரல், அஸ்திமுதலிய அவயங்களைத் தாக்கி, அவைகளை அழுகச்செய்கின்றன.

மேலே கண்ட மேகரோகங்களை வேரறுப்பதற்கு நம்முடைய மேகுலாந்தகன் சஞ்சீவிக்குச் சமானமாகச் சொல்லலாம். சுதேச வைத்தியர்களாலும், இங்கிலீஷ், வைத்தியர்களாலும் ரச கெந்தக சம்பந்தமான மருந்துகளையும், மேகாதி எண்ணெய்களையும். கொடுத்து உப்பில்லாத கடும்பத்தியங்கள் வைத்தும் தீராதெனக்கைவிடப்பட்ட அநேகமேக ரோகங்களைக் கண்டித்து நல்லபேர் எடுத்திருக்கிறது இத்திவ்ய ஔஷதத்தால் கொருக்கு அரையாப்பு, நாட்பட்ட வெள்ளை, கைகால் பிடிப்பு, கண்டமாலை, பவுத்திரம், யோனிப்புற்று, லிங்கப்புற்று, தந்திமேகம், மேகப்புண், கிரந்தி, மேக வாதரோகம், எந்த மருந்தினாலும் தீராத மேகப்படை, ஆறுதரிணங்கள், நாசி இன்றுகொண்டுபோதல், கருமேகம், தேகமாத்யந்தம் நிறம் மாறுதல் முதலிய எல்லா மேகரோகங்களையும் கண்டித்து தேகத்தை சுத்திசெய்துவிடும். இந்த ஔஷதம் மேகாதி யெண்ணெய்களைப்போல் சாப்பிடுவதற்கு அருவெருப்பு வெகுட்டல், குமட்டல் முதலியன இன்றி நாகரீகதேகங்களுக்கு ஏத்ததுபோல், லேக்கியமாக செய்யப்பட்டிருக்கிறது. இதற்குகடுமையான பத்தியமில்லை. இதன் விலை டப்பி 1-க்கு ரூபா 3 0 0

பித்தாதி ரோகமர்த்தனி.

தேகம் சுழலுவதுபோலித்தல், கண்ணுக்குக் காணப்படும் பொருள்கள் அசைவதுபோலித்தல், கண்கிருகிருப்பு, வேரறுந்துவிழும் மாம்போல் மனிதன் கீழ கவிழ்ந்துவிழுதல், கைகால் காந்தல், சரீரத்தில் எரிச்சல், கண்களை மூடி ல் பயங்கரமான மயக்கம், பித்தவாந்தி, புளிப்பாகவும், கசப்பாகவும். வாயில் ஊறுதல் முதலிய அநேகவிதமாகக் காணப்படும் எல்லா வகைப் பித்தரோகங்களையும் குணப்படுத்தும் பித்தஉபரியினால் உண்டாகும் எல்லாவியாதிகளுக்கும் இதைக் கையாளலாம்.

இதன் விலை புட்டி 1-க்கு ரூபா 2 0 0

டி. சாரதா புத்தகசாலை,
23, பாளையப்பன் தெரு, மின்ட்பில்டிங் போஸ்டு, சென்னை.

நான்கே நிமிஷத்தில்

நரைமயிர் கருக்குந் தயிலம்.

திருப்திகரமான கைகண்ட மருந்து.

தற்காலத்தில் பலவிதமாய்ச்செய்து. விற்கப்பட்டு வருகிற கப்புகள், மயிரைச் செம்பட்டையாகவும், பசுமை நிறமாகவும், சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி, விகாரப்படுத்தி விடுகின்றன. நம்முடைய தைலமோ நரைத்த மயிருக்குப்பூசிய ஐந்து நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன்னிருந்த கருமை நிறத்தையும், பளப்பளப்பையும் உண்டுபண்ணும், மேலே கூறியுள்ள விகாரகுணங்கள் இதில் கிடையாது. இதைப் பூசியபிரகு முகலட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால், வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள் இது உண்மை.

இதன் விலை புட்டி 1-க்கு ரூபா 1 0 0

ஆனந்த கஸ்தூரி மாத்திரை.

அசல் கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோஜனை பச்சைக் கற்பூரம், முத்த, பவழம் முதலிய பஸ்பங்களைச் சேர்த்துசாஸ்திரோக்தமாய் தயார்செய்யப்படுகின்றது இம்மாத்திரைகளின் பிரயோஜனம் அனந்தம். குழந்தை குட்டிகளோடு கூடிய குடும்பங்களில் அவசியம் கையிருப்பாய் வைக்கவேண்டிய ஔஷதங்களில் இதுவும் ஒன்று. கெர்ப்ப ஸ்திரீகள் தினமும் இரண்டு மூன்று மாத்திரைகள் வெற்றிலையில் வைத்துச் சாப்பிட்டுவர யாதொரு நோயும் வாராமற்றடுத்தும் பிறக்கும் குழந்தைக்கும் செவ்வாப்பு முதலிய ரோகங்களை உண்டாக்காமற் றடுக்கிறது. இருமல், கபசேஷ்டை, மந்தம் சீதளம் முதலிய அனேக வியாதிகளுக்குக் கொடுக்கலாம் கஸ்தூரிமாத்திரை எந்தெந்த வியாதிகளுக்குக் கொடுப்பதாக சொல்லுகிறார்களோ அந்தந்த வியாதிகளுக்கெல்லாம் பெரியவர்களுக்கும், சிறியவர்களுக்கும் கொடுக்கலாம். எந்த வியாதிக்கும் இம்மருந்தை உபயோகிக்கலாம்.

100-மாத்திரைக்குமேல் அடங்கிய புட்டி 1-க்கு அணா 8.

விருச்சிக விஷ சம்மாரி என்னும்
தேள்கடி மருந்து.

உலகத்திலே தேள் விஷத்திற்காக எத்தனையோ விதமான மருந்துகளிருந்தும், அவைகளெல்லாம் இது மருந்துக்கு சிறிதும் சமத்துவமாகாது. அற்புதகுணமமைந்த இம்மருந்தை கொட்டு வாயில் வைக்கவேண்டுவதுதான் தாமதம். அந்த நோய் எங்கு போய் ஒளித்துக்கொள்ளுகிறதோ தெரியவில்லை அழுதும் து துடித்தும், ஐயோ அப்பாவென்று கையை நெறித்துக் கதறிக்கெண்டும் வருவோர் மருந்துவைத்த அதேநிமிஷத்தில் பல சிரிப்பதைக் காணலாம் மாதம் 1-க்கு 2000-புட்டிக்குமேல் செலவாகிறது. இதன் விலை புட்டி 1-க்கு அணா 0 8 0

டி. சாரதா புத்தகசாலை,

நெ. 23, பாளையப்பன் தெருவு, மின்ட்பில்டிங் போஸ்டு, மதராஸ்.

இந்திராணிக்கிருதமும்,

சமய சஞ்சீவி லேகியமும்.

சூதக சம்பந்தமான வியாதிகளால் சரீரம் ஸ்தூலித்து, விட்டு விலக்கம் சரியான காலத்தில் உண்டாகாமலும், கர்ப்பந்தரிக்காமலுமிருக்கும் ஸ்திரீகளுக்கு இது திவ்ய ஔஷதம்.

சூதகம் கிரமப்படி வெளிப்படவேண்டிய காலங்களில் ஆகாமல் முப்பது நாற்பது அறுபது நாட்களுக்கு ஓர் தடவையாதல், சூதக காலத்தில் ரத்தம்சிறிது கண்டு மறைதல் சிலருக்கு சிறுவயதிலேயே சூதகம் நின்று சரீரம் ஸ்தூலித்தல், சூதகத்தில் உண்டாகும் உதிரத்தின் நிறம் மாறி வருதல், ஆயாசம், தலையிடி, தலைபாரம், மயக்கம், இடுப்புவிட்டுப்போதல், ஜீரணசக்தி குறைதல், துடை கணுக்கால் முதலிய இடங்களில் நோய், தீவிரமான ஸ்வாஸம், சூதககாலத்தில் பொறுக்கமுடியாத வயிற்றுவலியால் புழு துடிப்பதுபோல் துடித்தல் முதலியவைகளை இந்த ஔஷதம் பறறப்போக்கி, மறுதாரத்தில் மேலே கண்ட நோய்களெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் இல்லாமற் செய்துவிடும்.

சில ஸ்திரீகளுக்கு அடிக்கடி கற்ப அழிவு உண்டாதல், கர்ப்பந்தரித்ததுபோல் சூதகம் நின்று இரண்டு மூன்று மாதத்திற்குப் பின் உதிரங்கொட்டுதல், சிலருக்கு ஓர்குழந்தை பிறந்தபின் சந்தானமே இல்லாமற் போய்விடுதல், கர்ப்பத்தைத் தாமே அழித்துக் கொள்வதால் பின்னர் சந்தானம் இல்லாமற்போய்விடுதல் முதலிய கெடுதிகள் உண்டாவதுண்டு அத்தகைய ஸ்திரீகள் இந்த ஔஷதத்தை சேவிப்பார்களானல் அவர்களுடைய மனக்குறை நீங்கி, பத்துமாதம் நிறைந்தபின் அழகான குழந்தையைப் பெற்று சந்தோஷமடைவார்கள் தேகத்தில் ஓடிஓடி குத்துதல், கைகால் குந்தல், குடைச்சல், இடுப்புவிட்டுப்போதல், ஒரேபக்கத்தில் தலைவலி வாந்தி, விக்கல், வயிறுகழிதல், வயிற்றில் கட்டி திரளல், மேகவாய்வு, ஓடுவாய்வு, கர்ப்பவாய்வு, பக்கவாய்வு முதலிய எல்லா வாய்வுரோகங்களும் வரப்பிரசாதம் பெற்றது. இது புத்திரபாக்கியத்தைக் கொடுத்து உதவும் சிரேஷ்ட ஔஷதம், இம்மருந்தை பந்தயங்கட்டிப் பரீக்ஷிக்கலாம்.

கிருதமும், லேகியமும் அடங்கிய செட் 1-க்கு ரூபா 2—8—0

டி. சாரதா புத்தகசாலை,,

நெ. 23, பாலையப்பன் தெருவு, மின்ட்போஸ்டு, சென்னை.